எழுதியவர் : ஜோ க்ரூஸ்



# வண்ணமிகு அழகுசாதன பொருட்களும் ஆபரணங்களும்

Copyright © 2009, 2021
by Lu Ann Crews

All rights reserved.
Printed in India.

Published by:
**Amazing Facts India**
Post Box No 51
Banjara Hills, Hyderabad
Telangana, 500034

www.AmazingFactsIndia.org

# வண்ணமிகு அழகுசாதன பொருட்களும் ஆபரணங்களும்

எழுதியவர் : ஜோ க்ரூஸ்


1. அக்கினியிலிருந்து தப்பிக்க ஒரு மதம் .......................... 2

2. வண்ணமிகு அழகுசாதன பொருட்களும் ஆபரணங்களும் .................. 18

3. தடைக் கற்கள் .................. 46

## அத்தியாயம் 1

# அக்கினியிலிருந்து தப்பிக்க ஒரு மதம்

மக்கள், மதம் குறித்து அடிக்கடி மிக அதிகமாக மற்றும் தவறாக புரிந்து கொள்ளும் புகார்களில் ஒன்று அது அதிகமான கட்டுப்பாடுகளைக் கொண்டது என்பதுதான். எல்லாவற்றையும் அனுமதிக்கின்ற இந்தக் காலக்கட்டத்தில் அனைத்து வலியுறுத்துதலும் "உங்கள் விருப்பம் போல செய்யலாம்" என்பது போல காணப்படும்போது சொந்த விருப்பம் எனும் காரணம் கூறமுடியாத ஒரு மனப்பான்மை உருவாகியிருக்கிறது. இந்த மனப்பான்மை மதத்திற்குள்ளும் நுழைந்திருக்கிறது. சபை அங்கத்தினரும், அங்கத்தினரல்லாதவர்களும் ஒரே காரியத்தையே நாடி செல்வதுபோல தோன்றுகிறது: மதம் தனிப்பட்ட உரிமையையும் சுதந்திரத்தையும் குறிக்கீடு செய்யக்கூடாது. எதையாகிலும் "விட்டுக் கொடுத்தல்" என எந்த கொள்கையும் சொல்லும்போது உடனே அதைப்பற்றி சந்தேகம் எழுப்பப்படுகிறது.

இந்த தாராளமய ஆவி பலமாக வளர்ந்திருக்க, சபை வைத்திருக்கும் உயர்ந்த ஆவிக்குரிய பெரும் மதிப்பளவு பற்றி அநேக சபை அங்கத்தினர்கள் மேலும் மேலும் குறை பேசுகின்றனர். சந்தேகமில்லாமல் சபைக்கும் உலகத்திற்கும் இருக்கும் பெரும் விரிசலினால் தடுமாற்றமடைந்து மற்றும் மிகவும் "விசித்திரமான" சிறுபான்மையினர் எனும் சமுதாய களங்கத்தை எதிர்கொள்ள மனமில்லாமல், இந்த அங்கத்தினர்கள் கிறிஸ்தவ

பண்புகளை விட்டுக் கொடுக்க முயற்சித்து அதனை நியாயப்படுத்தப்பார்க்கிறார்கள். சபையானது குறுகிய மனப்பான்மையுடன் சட்டத்திட்டங்களை வகுப்பதினால் அநேக நல்ல மனிதர்கள் சபையில் சேர இந்த “தன்னிச்சையான விதிமுறைகளின் திணிப்பினால்” அதைரியப்பட்டு போகிறார்கள் என அவர்கள் அடிக்கடி வாதிடுகிறார்கள்.

இந்த புகார்கள் ஏற்றுக் கொள்ளக்கூடியது என்றால், நிச்சயமாகவே சபையின் கொள்கையில் சில அடிப்படை மாற்றங்களைச் செய்வது அவசியம். அவைகள் ஏற்றுக் கொள்ளப்படவில்லையென்றால், அப்பொழுது நாம் உண்மையான வேதாகமத்தைச் சார்ந்த கிறிஸ்தவ பண்புகளின் நிலைப்பாட்டை எப்படி அறிந்து கொள்ள வேண்டும் என்பதை துணிச்சலாக தெரிந்து கொள்வது அவசியம். வேறு வார்த்தைகளில், இந்த விதிமுறைகள் தேவனால் உண்டாக்கப்பட்டதா அல்லது சபையினால் உண்டாக்கப்பட்டதா என்பதை சரியாக நிலைநிறுத்த வேண்டும். அவைகள் தன்னிச்சையாக தடைசெய்யப்பட்டவைகளா அல்லது நம்முடைய சந்தோஷத்திற்காக கொடுக்கப்பட்ட தேவனின் அன்பான ஒழுங்கு முறைகளா என்பதை நாம் காணவும் வேண்டும்.

தனி மனிதனின் நடத்தை விதிமுறைகளுக்கு எதிரான பிரசித்தப் பெற்ற கிளர்ச்சிக்கு மாறாக, பொதுவான கிறிஸ்தவ வாழ்க்கைப் பற்றிய அதிலும் குறிப்பாக நன்னடத்தைப் பற்றிய வேதாகம உண்மைகளை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

தேவனுடைய வார்த்தைகளின் நிலைப்பாட்டுடன் தங்கள் சொந்த சுதந்திரத்துக்காக இந்த இணக்கியின் நவீன கோரிக்கைகள் எவ்வளவு ஒத்ததாய் இருக்கின்றது? உண்மையான வேதாகம நிலைப்பாடு ஒரு தேவதூதனால் அதீத அன்புடனும் தூண்டுதலுடனும் எடுத்துச் சொல்லப்படுகிறது என்று வைத்துக்கொள்வோம். அந்த சத்தியம் எவரும் ஏற்றுக் கொள்வதற்கு சுலபமாயிருக்குமா?

இப்போழுது இதை எதிர்கொள்வோம். நித்திய ஜீவனுக்குப் போகின்ற பாதை சுலபமான, மலர்தூவப்பட்ட வழி அல்ல. இயேசு இது குறித்து அநேக வசனங்கள் மூலம் வலியுறுத்தியிருக்கிறார், அதற்கு நாம் நம் கண்களை மூடிக்கொள்ள முடியாது. அவர் சொன்னார், “ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும் வழி நெருக்கமுமாயிருக்கிறது அதைக் கண்டுப்பிடிக்கிறவர்கள் சிலர்.” (மத்தேயு 7:14). கிறிஸ்தவராயிருப்பதின் பிரதான கொள்கைகளில் ஒன்று தன்னைத்தான் வெறுத்தல். கிறிஸ்து சொன்னார், “ஒருவன் என்பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக் கொண்டு, என்னை பின்பற்றக்கடவன்” (லூக்கா 9:23). ஒரு கிறிஸ்தவனாயிருத்தல் என்பது முழுமையான ஒப்புக்கொடுத்தலின் ஈடுபாடு ஆகும். விலையேறப் பெற்ற நித்திய ஜீவனை நாம் பெற்றுக் கொள்ளும்படி நம்மிடம் இருக்கும் ஒவ்வொன்றையும் கொடுப்பதற்கு விருப்பமாயிருக்க வேண்டும் என்பதை நம்முடைய கர்த்தரின் உவமையாகிய முத்தும் முத்துவியாபாரியும்

எடுத்துக்காட்டுகிறது. நமக்கும் கர்த்தருடைய சித்தத்தை செயல்படுத்துவதற்கும் இடையே வேறு ஏதாகிலும் அல்லது ஒரு நபராகிலும் குறுக்கிட அனுமதித்தால் நாம் இரட்சிக்கப்பட முடியாது.

பாதை மிகவும் குறுகலானது மற்றும் கட்டுப்பாடு நிறைந்தது என்பதை மக்கள் உணர முடியாதப்படிக்கு சீஷத்துவத்தின் விலைமதிப்பை நாம் குறைத்து மதிப்பிடவைக்கும் குற்ற உணர்வு நமக்கு இருந்திருக்கிறதா? இயேசு சொன்னார், "உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டானவைகளையெல்லாம் வெறுத்துவிடாவிட்டால் அவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்." (லூக்கா 14:33). பரலோகம் செல்வதற்கான ஆயத்தத்தில் செல்வந்தனான வாலிப தலைவன் ஒன்றே ஒன்றில் குறைவுள்ளவனாய் காணப்பட்டான் என இயேசுவால் சுட்டிக் காட்டப்பட்டான்; ஆனாலும் அந்த ஒன்றை அவன் செய்வதற்கு மனதில்லாதவனாய் இருந்தான். அவன் இரட்சிக்கப்படுவதற்கு தன்னுடைய ஐசுவரியத்தை ஒப்படைத்திருக்க வேண்டும், ஆனால் அவனுக்கோ அதை விட்டுவிட மனமில்லை. கர்த்தரை நேசிப்பதைக் காட்டிலும் அதிகமாக வேறு எதையோ நேசித்தான், அவன் துக்கமடைந்தவனாய் போய்விட்டான், அதனால் இழந்துபோனான். இந்த விஷயத்தில் கிறிஸ்துவினுடைய நிலைப்பாடு மிக உறுதியாயிருந்தது, "தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல." (மத்தேயு 10:37) என்றும் அவர் சொன்னார்.

இப்பொழுது, புருஷருக்கும் ஸ்திரிகளுக்கும் இயேசுவின் கூற்றுகளை அறிமுகப்படுத்த தயவான, அதிக சாமர்த்தியமான அன்பான வழியை நாம் கண்டு பிடிக்கவேண்டுமென்பதை நான் நம்புகிறேன். ஆனால், தனி நபர்களுக்கு கர்த்தராகிய கிறிஸ்துவின் மேல் அன்பில்லையென்றால் அது எப்படி வழங்கப்பட்டாலும் அதனால் பயனில்லை என்றும் நான் நம்புகிறேன். செய்தியில் தவறில்லை; பிரசங்கம் செய்கின்றவர்கள் அதனை எடுத்துச் சொல்லும் விதத்தில் சில தவறுகள் இருக்கின்றன, ஆனால், தன்னைத்தான் வெறுத்தல் எனும் சத்தியத்திற்கு எதிராக கிளர்ச்சி செய்யும் கிறிஸ்தவர்களின் அணுகுமுறையில்தான் பெரும்பாலும் நிறைய குறை இருக்கிறது.

இந்த உலகத்தில் எப்படி தனிப்பட்ட உணர்வுகளும், அணுகுமுறைகளும் எல்லா வித்தியாசங்களையும் உருவாக்குகின்றன என்பதை விளக்க அனுமதியுங்கள். விவாகம், கிறிஸ்துவுக்கு ஒரு மனிதனுடைய ஆவிக்குரிய ஒப்புக்கொடுத்தலோடு கூட அதிகமான கட்டுபாடுகளை உடைய அனுபவம் என்பதை இந்த உலகில் எந்த மனிதனும் தானாகவே புரிந்து கொள்கிறான். பழைய பெரும்பாலான விருப்பங்களையும், பழக்கவழக்கங்களையும் விட்டுவிடுவதாக புருஷன் உறுதிமொழி எடுக்கிறான். மற்ற பெண்களுடன் பழகும் சுதந்திரத்தை விட்டுக்கொடுக்கிறான், மற்றும் மீதமிருக்கும் தன் வாழ்க்கை முழுவதையும் ஒருத்தியுடனே இணைத்துக் கொள்ள தன்னை முழுவதிலும்

பிணைத்துக்கொள்கிறான். மணப்பெண்ணும் அதேபோன்று கட்டுப்பாடான வாக்குறுதிகளை ஏற்கிறாள்; தன்னுடன் பிணைபட்டிருக்கும் மனிதனுக்காக மற்ற எல்லாவற்றையும் விட்டுகொடுக்க ஒப்புக்கொள்கிறாள், திருமண வாக்குறுதிகள், சந்தேகமில்லாமல், மனிதன் தன் வாழ்நாளில் எடுக்கக் கூடிய மிக குறுகிய கடுமையான உறுதிமொழிகள். கட்டுப்பாடுகளும், விதிமுறைகளும் நிறைய துன்பங்களைக் கொடுப்பதற்கு காரணமாயிருந்தால், சம்பந்தப்பட்ட எல்லாருக்கும் மிகவும் பரிதாபமான, சந்தோஷமற்ற அனுபவங்களாக இருக்க வேண்டும். ஆனால் அப்படி அல்லவே! அவைகள் சந்தோஷகரமான நிகழ்ச்சிகள். ஏன்? தன்னுடைய வாழ்க்கையை மணமகனோடு இணைப்பதற்காக வாக்குக்கொடுக்க எழுந்து நிற்கும்போது ஏன் அவ்வளவு பிரகாசமாக மணமகள் காணப்படுகிறாள்? மணமகனுடைய நடபடிகளுக்கு தடை ஏற்படும் என்றாலும் அவன் வாக்குறுதிகளைக் கொடுக்க சந்தோஷமாயிருப்பது ஏன்? அதற்கான பதில் எளிமையானது. அவர்கள் ஒருவரையொருவர் நேசிக்கிறார்கள். ஒருவருக்கொருவர் வைத்திருக்கின்ற மனப்பான்மையும் நல்லுணர்வும் அவர்கள் கட்டுப்பாடுகளையும் சந்தோஷமாக ஏற்றுக்கொள்ள வைக்கிறது.

திருமண நிகழ்ச்சிக்குப்பிறகு மணமகள் எப்பொழுதாவது குறை சொல்லுவதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? ஒருவேளை மனம் கசந்து இவ்வாறு சொல்வதை யாரும் கேட்டிருக்க

மாட்டார்கள், "இனி நான் ஆல்வினுடனோ அல்லது எட்வினுடனோ, பழக முடியாது. இது சரியில்லை. நான் என்னுடைய கணவனுக்கு உண்மையாயிருக்க வேண்டுமென அரசாங்கம் என்னை வற்புறுத்துகிறது. இந்த திருமண பந்தம் கட்டுப்பாடு நிறைந்தது." இல்லை, நீங்கள் இப்படி கேட்டிருக்கமாட்டீர்கள். பொது மக்களின் கருத்து இப்படிப்பட்ட விபச்சாரம் செய்யும் மணமகளை கண்டிப்பதற்கு தயாராயிருக்கிறது, ஆனால் அதைப்பற்றி அவள் நினைத்துக்கூட பார்ப்பதில்லை. அவள் அன்பாயிருக்கிறாள் மற்றும் அன்பு எல்லாவற்றையும் மாற்றுகிறது. தண்டனை கிடைக்கும் என்பதாலோ, கண்டிப்பார்கள் என்ற பயத்தினாலோ அவள் உண்மையாயிருப்பதில்லை. தான் ஆழமாய் நேசிக்கும் ஒருவரை திருப்திபடுத்தவேண்டும் என்பதற்காகவே அவள் உண்மையாயிருக்கிறாள்.

இந்த உலகத்தில் அதிக பரிதாபத்திற்குரிய ஆண்களும் பெண்களும் யார் என்றால் திருமணமான பிறகும், ஒருவரையொருவர் நேசிக்காமலிருக்கிறவர்களே. இந்த உலகமே நேரடி நரகம் போலிருக்கும். அவர்கள் மீது சுமத்தப்படும் கட்டுப்பாடுகள், விதிமுறைகள் பற்றி கோபப்பட்டு புகார் கூறுகிறார்கள். அதுபோலவே, அனைத்துலகில் இருக்கும் சந்தோஷமில்லாத கிறிஸ்தவர்கள் யாரென்றால், ஞானஸ்நானம் மூலமாக கிறிஸ்துவோடு பிணைக்கப்பட்டும் அவரை இன்னமும் நேசிக்காத சபை அங்கத்தினர்களே, அவர்கள் மீது தங்கள் குறுகிய கட்டுப்பாடுகளைக்

கொண்ட மதத்தை திணிப்பதாக சபையையும் அதன் போதகர்களையும் அடிக்கடி கடினமாக குற்றம் சுமத்துகிறார்கள்.

ஆனால் மதத்திலோ அல்லது போதகர்களிடத்திலோ தவறு இருக்கிறதா? சோகமான உண்மையானது, சரியான மதத்துக்கு மூலைக்கல்லாயிருக்கின்ற தனிப்பட்ட அன்பின் உறவில் ஒருபோதும் இணைக்கப்படாத மக்களேயாகும். அவர்களில் அநேகர் வேதாகம வகுப்பிலிருந்து சரியான வசனங்களை படித்திருக்கிறார்கள் மற்றும் கடைசி கால சம்பவங்களை வரிசையாக விளக்குவதற்கு அவர்களால் முடிகிறது. ஆனால், இயேசு கிறிஸ்துவோடு தனிப்பட்ட ஈடுபாடு இல்லை. எங்கையோ அல்லது எல்லா இடத்திலும் கொள்கைகளைப்பற்றி படித்ததில் உண்மையான உள்ளத்தில் மதத்தின் அடிப்படையை அவர்கள் கற்றுக்கொடுக்கப்படவில்லை அல்லது அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அது சட்டத்திட்டங்களின் ஒரு தொகுப்போ அல்லது கோட்பாடுகளின் அட்டவணையோ அல்ல, மாறாக இயேசுகிறிஸ்து என்கின்ற மனிதரோடு இருக்கின்ற ஆழமான அன்பின் ஈடுபாடு ஆகும்.

இலட்சக்கணக்கான கிறிஸ்தவர்களின் சிரமம் அவர்கள் சபை அங்கத்தினர்களாக இருப்பதின் நோக்கம் மட்டுமே. அவர்கள் அக்கினியிலிருந்து தப்பிக்க ஒரு மதத்தை வைத்திருக்கிறார்கள். சிலவற்றை மட்டும் அவர்கள் செய்கிறார்கள்,

ஏனென்றால் பாதையின் கடைசியில் வரவிருக்கும் அக்கினிக்கு அவர்கள் பயப்படுகிறார்கள். அவர்கள் பயத்துடன் கர்த்தரை சேவிக்கிறார்கள் ஏனென்றால் அக்கினிக்கடலில் தள்ளப்பட்டுவிடுவோம் என்கின்ற பயத்தில் இருக்கிறார்கள். அவர்கள் வருத்தத்துடனும் துயரத்துடனும் இருப்பதில் ஆச்சரியமில்லை! சத்தியத்துக்கு எதிராக என்ன தவறான போக்கு! உலகத்தில் கிறிஸ்தவர்கள் சந்தோஷம் நிறைந்த மக்களாயிருக்கவேண்டும் - புதிதாக திருமணமான தம்பதிகள் திருமண அறையை விட்டு வெளியில் வரும்போது அவர்கள் பெற்றிருக்கும் சந்தோஷத்தைக் காட்டிலும் அதிகமாக ஒருவன் தன் சொந்த மனைவியையும் குடும்பத்தையும் நேசிப்பதை விட அதிகமாக கர்த்தரை கிறிஸ்தவன் நேசிக்க வேண்டும்.

மனைவி தன்னுடைய கணவன் தன்னை விவாகரத்து செய்துவிடுவானோ என்ற பயத்துடன் அவனுக்குப்பிடித்த உணவை சமைத்துக் கொடுத்தாள் என்றால் அது ஒரு சந்தோஷமான வீடாக இருக்கும் என நினைக்கிறீர்களா? இப்படிப்பட்ட சிரமத்தினால் பூலோக உறவுகள் முறிந்துவிடும். கணவனை நேசிப்பதினாலும் அவனை திருப்தி படுத்த வேண்டும் என்பதினாலும் அவள் அந்த உணவை சமைக்கிறாள். அவனுடைய மனைவியின் பிறந்த நாள் வருமுன், ஒரு அன்பார்ந்த கிறிஸ்தவ கணவன் அவளுடைய விருப்பமென்ன என்பதை கவனிக்கிறான். பொதுவாக அவனுடைய தலையில் அடித்து அவளுடைய தேவை என்ன என்பதை அறிய வைப்பதில்லை! அவளை நேசிப்பதினாலும் அவளை திருப்திபடுத்த

வேண்டும் என்பதினாலும் அவன் சந்தோஷமாக ஒரு வெகுமதியை வாங்குகிறான். அதே வண்ணம், கிறிஸ்தவன் கர்த்தரை திருப்திப்படுத்துவதற்காக அவன் தினமும் வேதாகமம் வாசித்து அதற்கான வழிகளை கண்டுபிடிக்கிறான். தான் பிரதானமாக நேசிக்கும் ஒருவரை திருப்திபடுத்த என்னென்ன அடையாளங்களும் வெளிப்பாடுகளும் கிடைக்குமென தொடர்ந்து பார்த்துக்கொண்டே இருக்கிறான். வேதாகமத்தில் இந்த வார்த்தைகளை வாசிக்கிறோம், "கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப்பாருங்கள்" (எபேசியர் 5:10). ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் எப்படிப்பட்ட குறிக்கோள்! நிஜமாக, கர்த்தரை உண்மையாய் நேசிப்பவர்களுக்கு இதுதான் பிரதானமான விருப்பம். முதல் பிரதான கட்டளையை கிறிஸ்து சுருக்கமாக இந்த வார்த்தைகளில் கூறியதில் ஆச்சரியமில்லை: "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்பு கூறுவாயாக; இது முதலாம் பிரதான கற்பனை" (மத்தேயு 22:37, 38).

சில கிறிஸ்தவர்கள் விதிமுறைகள் மற்றும் கண்டிப்பு பற்றி கோபப்படுவதற்கும் புகார் சொல்லுவதற்கும் உண்மையான காரணம் என்னவென்றால் அவர்களை பரிதாபத்துக்குறியவர்களாக்குவதற்கு மட்டுமே போதுமான மதம் இருக்கிறது. கிறிஸ்தவ "அனுபவத்தின்" நோக்கம் விதிமுறைகளுக்கு ஏற்ப தொடர்ந்து வாழ்ந்து காட்டுவதின்

அடிப்படையில் தான் இருக்கிறது - கற்பனையை கைக்கொள்வதற்கான முயற்சி. ஒரு கணவன் மனைவிக்கு ஆதரவாக சட்டத்திட்டங்களுக்குக் கீழ்ப்படிவது நியாயம் என்றால் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவது நிச்சயமாகவே தவறல்ல. ஆனால் சட்டத்திட்டங்களின் காரணமாகவே கீழ்ப்படிதல் இருக்குமென்றால் கிறிஸ்தவனிடமும், கணவனிடமும் ஏதோ ஒரு அபாயகரமான தவறு இருக்கிறது. அன்பு சட்டபாரத்தை நீக்குகிறது மற்றும் சுமையாகவும் சிரமுமாகவும் இருக்கின்ற ஒன்றை மகிழ்ச்சிகரமாக மாற்றுகிறது.

மூன்று மகன்களுக்கு தாயாராகிய ஒருவர் அவர்களை சீர்ப்படுத்துவதற்கும் சுத்தப்படுத்தவும் மிகவும் சிரமப்பட்டார்கள். அநேக சிறு பையன்களைப் போல, இந்த மூன்றுபேரும் விதிமுறைகளுக்கு எதிராயிருந்தனர், சரியாக தங்கள் காதுகளை கழுவமாட்டார்கள், தலைவார மட்டார்கள், தங்கள் பாதணிகளை சுத்தம் செய்யமாட்டார்கள். அது ஒரு தினசரி போராட்டமாயிருந்து தாயார் தன்னுடைய அதிகாரத்தின் மூலமாகவும் கட்டாயத்தின் மூலமாகவும் வெற்றிப் பெற்றார். ஒரு நாள் மூத்தமகன், தன் இளம்பிராய ஆரம்பத்தில், குறை காணமுடியாத ஒரு சுத்தத்துக்கு அடையாளமாக இருப்பவன் போல தன் அறையை விட்டு வெளியே நடந்தான். தலைமுடி நன்றாக சீவி சிங்காரிக்கப்பட்டு அவனுடைய பாதணிகள் நல்ல முறையில் சுத்தமாக்கப்பட்டு ஒளிர்ந்தன. தாயார் ஏறக்குறைய மயக்கமாகிவிட்டார். அவளுடைய ஆச்சரியத்தையும்

மகிழ்ச்சியையும் அடக்க முடியவில்லை. இந்தப் பெரிய மாற்றத்துக்கு என்ன காரணம் என்பதை பொறுத்திருந்து பார்க்கின்ற ஒரு நல்ல முடிவை எடுத்தாள். இந்தப் புதிருக்கான விடையைக்காண வெகு நேரம் ஆகவில்லை. மறு நாளிலேயே தாயார் அவர்கள் வீட்டுக்கு பக்கத்தில் ஒரு புதிய குடும்பம் குடியேறியிருந்ததை தெரிந்து கொண்டார். அந்த குடும்பத்தில் ஒரு பெண் இருந்தாள். ஒருவேளை அவள் ஜானியை பார்க்கவில்லை, ஆனால் அவன் அவளை பார்த்திருக்கிறான், அது அவனை அதிகமாக பாதித்திருந்தது. அன்பு தான் அவனுடைய சீர்ப்படுத்தும் விதிமுறைகளுக்கான அணுகுமுறையை மாற்றியது என நாம் சொல்லமுடியாது, ஆனால், நிச்சயமாகவே இதற்குமேல் தாயின் கட்டாயப்படுத்தும் பயத்தினால் அவன் தன்னை சுத்தப்படுத்திக் கொள்ளவில்லை.

செய்தி என்னவென்றால் கிறிஸ்தவ ஜீவியம் வெறும் “செய்யக்கூடியவை”, “செய்யக்கூடாதவை” என்பதனால் உருவாக்கப்பட்டது அல்ல, பொதுவான திருமணத்தைப்போல ஆவிக்குரிய திருமணத்தில் கட்டுப்பாடுகள் இருக்கின்றன. ஆனால், எதன் மீது பாசம் காட்டப்படுகிறதோ அதன் மீது இருக்கும் அன்பினால் எப்பொழுதும் என்றென்றும் அதனைப் பிரியப்படுத்தக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. கிறிஸ்துவில் அன்பாயிருக்கின்ற கிறிஸ்தவர்கள் உற்சாகமாய், இதுதான் உண்மையான சந்தோஷத்துக்கு வழி என ஒளிவீசும் சாட்சிகளாய் இருப்பார்கள். துரதிஷ்டவசமாக,

சபை அங்கத்தினர்களில் ஒரு பெரும் கூட்டத்தார் ஆனந்தமாக சந்தோஷப்படுவதற்கு பதிலாக துக்க முகத்துடன் இருக்கிறார்கள். தங்கள் விருப்பப்படி உணவு உட்கொள்ளவோ அல்லது உடை அணியவோ முடியாதது பற்றி அவர்கள் கசப்புணர்வுடன் புகார் சொல்லுகிறார்கள். அவர்கள் நிறைய காரியங்களை “விட்டுவிட” வேண்டும் என சபை கட்டாயப்படுத்துவதாக குற்றஞ்சாட்டுகிறார்கள். அவர்களுடைய மதம் ஒரு தலைவலியுடன் இருக்கின்ற ஒரு மனிதனைப்போல இருக்கின்றது. அவன் தன்னுடைய தலையை வெட்டிப்போட விரும்பவில்லை, ஆனால் அதை வைத்திருப்பதும் அவனுக்கு வலியாக இருக்கிறது. அவர்களுடைய மகிழ்ச்சியற்ற அணுகுமுறை, அவர்கள் மதம் நிர்வாகக் குழுவின் திணிப்பாயிருக்கிறது என்றும் மந்தமான போதகர்கள் எல்லா தடைசெய்யப்படவேண்டிய விதிமுறைகளை, ஆண்கள், பெண்கள் மற்றும் வாலிப மக்கள் சந்தோஷப்படக்கூடாதபடி உட்புகுத்த கட்டாயப்படுத்துகிறார்கள் என்றும் கருதுகிறது. ஆனால் இது உண்மையா? இறையியலை நிர்ணயம் செய்யும் “கிறிஸ்தவ தரம்” என்று நாம் அழைக்கும் ஆவிக்குரிய கோட்பாடுகள் பற்றி என்ன? திரையரங்குகளுக்கு ஒருவர் போகக்கூடாது என்பது சபையின் தன்னிச்சையான சட்டமா? ஒரு கிறிஸ்தவனுக்கு நவீன கால நடனம் என்பது நல்லதல்ல என்பது தேவனுடைய முடிவா அல்லது மனிதனுடைய முடிவா? மற்றும் வண்ணமிகு

அழகுசாதன பொருட்களும், ஆபரணம் இவற்றின் பயன்பாடு பற்றி என்ன? – அது தேவனுக்குப் பிரியமானதா அல்லது பிரியமில்லாததா? நம்முடைய விசுவாசம், கோட்பாடு இவைகளின் ஒவ்வொரு முக்கிய முடிவும் வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டிருப்பது போல தேவனுடைய சித்தத்தை அடிப்படையாக வைத்து கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பதே உண்மை, அவர் மீது வைத்திருக்கும் அன்பு எப்பொழுதும் இப்படி ஒரு கேள்வியை கேட்க வைக்கும்; நான் எப்படி எப்பொழுதும் தேவனுக்குப்பிரியமானது எது என்பதை கண்டுபிடிக்க முடியும்?

நம்மை பிரியப்படுத்திக் கொள்வதைவிட தேவனை எப்படி பிரியப்படுத்த முடியும் என்பதற்கான குறிப்பீடுகளும், அறிகுறிகளும் வேதாகம வாக்கியங்களில் ஏராளமாய் காணப்படுகின்றன என்பதே இந்த கேள்விக்கான பதில், எந்த நடவடிக்கைக்கும் பழக்கவழக்கத்துக்கும் கேட்கப்பட வேண்டிய உண்மையான சரியான கேள்வி இதுவாகத்தான் இருக்கும்: அதைப்பற்றி தேவன் என்ன நினைக்கிறார்? இந்த போதகர் அல்லது அந்த போதகர் அதைப்பற்றி என்ன நினைக்கிறார் அல்லது இந்த சபையோ அந்த சபையோ அதைக்குறித்து என்ன சொல்லுகிறது என்பது ஒரு பொருட்டல்ல. பெரிய மிக முக்கியமான கேள்வி, அது கர்த்தரை பிரியப்படுத்துகிறதா அல்லது பிரியப்படுத்தவில்லையா என்பதே. தேவன் அதை அங்கீகரிக்கவில்லை என வேதவாக்கியம் வெளிப்படுத்துவதை நாம்

கண்டு பிடித்தால் மேற்கொண்டு அது குறித்து ஒரு உண்மையான கிறிஸ்தவனின் இருதயம் வாதிடக்கூடாது. நாம் அவரை மிக அதிகமாக நேசிப்பதினால் அவரை பிரியப்படுத்தாமலிருப்பதற்கு துணிவதில்லை. நம்முடைய மகிழ்ச்சி நாம் நேசிக்கின்ற ஒருவர் பிரியப்படுவதைக் கண்டு பிடித்து அதனை கடைபிடிப்பதில் இருக்கவேண்டும் மற்றும் அவருக்கு பிரியமில்லாதவைகளை நம்முடைய வாழ்க்கையிலிருந்து அகற்ற வேண்டும்.

மக்கள் ஒருவரையொருவர் நேசிக்கும்போது ஒருவருக்கொருவர் பயமுறுத்திக்கொள்ளவோ அல்லது இறுதி எச்சரிக்கைகளை விடுத்துக்கொள்வதோ தேவையில்லை. அவர்கள் தங்கள் அன்பை தெரிவிக்கவும் ஒருவரையொருவர் பிரியப்படுத்திக்கொள்ளவும் எப்பொழுதும் வழிமுறைகளைத் தேடுவர். கிறிஸ்து கூறின முதலாம் பிரதான கட்டளையை நிறைவெற்றுபவர்கள் கிழ்ப்படிவதை பாரமாக நினைக்க மாட்டார்கள். அவருடைய சித்தத்தை அறிந்து கொள்ள முயலுகின்ற உணர்வுள்ளவர்களை தேவன் தேடிக்கொண்டிருக்கிறார். தண்டனையின் பயத்தினால் நடுங்கிக் கொண்டிருப்பவர்கள் மீது தேவன் பிரியமாயிருப்பதில்லை. தேவன் சொல்கிறார்: “நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன், உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன். வாரினாலும் கடிவாளத்தினாலும் வாய் கட்டப்பட்டாலொழிய, உன் கிட்டச்சேராத

புத்தியில்லாக் குதிரையைப்போலவும் கோவேறு கழுதையைப்போலவும் இருக்கவேண்டாம்.” (சங்கீதம் 32:8,9).

அநேக கிறிஸ்தவர்கள் “கடிவாளம்” தொண்டர்கள், அவர்கள் பயமுறுத்துதல்களுக்கு மட்டுமே பதிலளிக்கிறார்கள் மற்றும் தண்டனையின் பயத்தினால் கீழ்ப்படிகிறார்கள். தேவன் சொல்லுகிறார் “என்னிடமிருந்து வரும் ஒரு பார்வையினால் நீ சரி செய்யப்பட வேண்டுமென நான் விரும்புகிறேன்” யாரெல்லாம் அவரை அதிகமாய் நேசிக்கிறார்களோ மற்றும் அவருடைய பிரியத்தை குறிப்பறிந்து கொள்ள கவனிக்கின்றார்களோ அவர்கள் அவருடைய அன்பான திருந்தவைக்கும் பார்வையை அடையாளம் கண்டுகொள்கிறார்கள். ஒரே நோக்கத்துடன் வேதாகமத்தை ஆராய்தல் - அவரை பிரியப்படுத்துவது எது என்பதை கண்டுபிடித்தல் - அவருடைய சித்தத்தின் சிறிய வெளிப்பாட்டுக்கு உடனே அவர்கள் கீழ்ப்படிவார்கள். இதுதான் உண்மையான கிறிஸ்தவத்தின் சாராம்சம் - அன்பினால் அவருடைய வெளிப்படுத்தப்பட்ட சித்தத்துடன் கைகோர்த்து ஒவ்வொரு கட்ட வாழ்க்கையையும் செலவிடுதல்.

## ஆத்தியாயம்- 2

# வண்ணமிகு அழகுசாதன பொருட்களும் ஆபரணங்களும்

கிறிஸ்தவ தரங்களை நிர்ணயிக்க அன்பினை எப்படி ஊக்குவிக்கும் காரணியாக உருவாக்குவது என்கின்ற இந்த சிறிய பின்னணியில் இப்பொழுது நாம் எப்படி கொள்கையானது பழக்கத்தில் செயல்படுகிறது என்பதை விளக்குவதற்கு நாம் தயாராயிருக்கிறோம், சபை "நடத்தை" விதிகளில் ஏதாகிலும் ஒன்றை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளலாம் என்றாலும், ஆலோசிக்கத்தக்க புகார் அளிக்கப்படுகின்ற ஒன்றை நாம் தெரிந்து கொள்வொம் - வண்ணமிகு அழகுசாதன பொருட்களும் ஆபரணங்களும், "சபை இப்படி சொல்லுவதால்" திரளான உண்மையான அங்கத்தினர்கள் செயற்கையான அலங்காரங்களின் உபயோகத்தை தள்ளி வைத்திருக்கிறார்கள். கிறிஸ்தவ வாழ்க்கையில் ஏதாகிலும் செய்வதற்கு இது ஒரு மட்டமான காரணம். நம்பிக்கையுடன், இந்த அத்தியாயத்தைப் படித்தப் பிறகு, சபையின் தன்னிச்சையான விதிமுறைகள் பற்றிய விளக்கங்களைப்பற்றி பேசிய பிறகு இது தனிப்பட்ட நம்பிக்கைக்கு, கர்த்தர் மீது அன்புவைத்தல் மற்றும் பிரியம் வைத்தல் என்கின்ற அடிப்படையில் இந்த விளக்கம் வழி வகுக்கும்.

மறுபடியும் மறுபடியும் போதகர்கள் எதிர் கொள்ளும் கேள்விகள்: "என்னுடைய சிறிய திருமண

மோதிரத்தில் என்ன தவறு இருக்கிறது? இந்த சின்ன ஆபரணத்தை அணிவதினால் தேவன் என்னை பரலோகத்தை விட்டு தள்ளி வைத்துவிடுவார் என நினைக்கிறீர்களா?" அநேக வேளைகளில் கிறிஸ்துவத்தில் இப்படிப்பட்ட எதிர்மறையான அணுகுமுறைகளைக் கண்டு என்னுடைய இருதயம் திகைப்படைந்து துன்பப்பட்டிருக்கிறது. இந்த கேள்வி எதைக் குறிக்கிறது என்பதை தயவுசெய்து கவனியுங்கள்: கேள்வி கேட்பவர் நிச்சயமாகவே எத்தனை மீறுதல் செய்து, அதே வேளையில் பரலோகத்தும் போக வேண்டும் என அறிய விரும்புகிறார். அவருடைய அணுகுமுறை "அதை - செய் - இல்லாவிட்டால்" என்கின்ற சட்டங்களை வைத்து ஒரு சட்டப்பூர்வமான வாஞ்சைகளை நிறைவேற்றுவதை பிரதிபலிக்கிறது.

ஆனால் இந்த அணுகுமுறை தவறானது, தவறானது, தவறானது! உண்மையான கிறிஸ்தவன் இப்படிக் கேட்கமாட்டான், "தேவனுடைய புத்திரனாயிருப்பதற்கு நான் எவ்வளவு செய்ய வேண்டும்?" ஆனால் அதற்கு மாறாக, "நான் நேசிக்கின்ற இயேசுவை பிரியப்படுத்த நான் எவ்வளவு செய்ய வேண்டும்?" இது தேவனுடைய சித்தத்தை தேடுவதற்கான நேர்மறையான, வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டிருப்பது போல சந்தோஷமாக அவருடைய சித்தத்துக்கு கீழ்ப்படியும் அடிப்படையான அணுகுமுறை. ஒருமுறை இந்த மனம்திறந்த அன்பான சர்ச்சைக்கான ஆதாரம் ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டால் மீதமிருப்பது

வண்ணமிகு அழகுசாதன பொருட்களும் மற்றும் ஆபரணங்களின் உபயோகம் பற்றி தேவனுடைய சித்தத்தின் குறிப்பறிந்து வேதவாக்கியங்களை ஆராய்வதாகும். இதனை இப்பொழுது தொடர்ந்து செய்வோம்.

ஆதியாகமம் 35:1-4 - ல் தன் குடும்பத்தை அழைத்துக் கொண்டு போய் அவர்களை பெத்தேலில் உள்ள கர்த்தருடைய பலிபீடத்தண்டையிலே நிறுத்த யாக்கோபு தேவனால் பணிக்கப்பட்டான். யாக்கோபுக்கு அது ஒரு பரிசுத்தமான இடம் - ஆரம்ப நாட்களில் அவனுடைய சொப்பனத்தில் பரலோக ஏணியை கண்டபிறகு அவனுடைய மனமாற்றத்திற்கு வழிகோலிய இடம். அந்த பரிசுத்தமான ஸ்தலத்தில் அவர்களை சுத்தம்பண்ணிக் கொள்ளும் முன்பதாக யாக்கோபு தன் குடும்பத்தாரிடம் சொன்னது, “உங்களிடத்தில் இருக்கிற அந்நிய தெய்வங்களை விலக்கிப் போடுங்கள்” (வசனம் 2). வெளிப்படையாக தெரிவது, தாங்கள் தங்கியிருந்த தேசத்தில் குடும்பத்தார் சில புற ஜாதிகளின் பழக்க வழக்கங்களை கற்றுக்கொண்டிருந்தனர். பலிபீடத்துக்கு முன்பாக செல்லுமுன்பதாக அவர்கள் சில பொருட்களை விலக்கிவைக்க வேண்டியிருந்தது, ஏனெனில் அவைகள் அந்நிய தேவர்களின் பொருட்கள். தயவு செய்து வசனம் 4 - ஐ கவனியுங்கள், இந்த பொருட்கள் என்னவென்று தெரியும்: “அப்பொழுது அவர்கள் தங்கள் கையில் இருந்த எல்லா அந்நிய தெய்வங்களையும், தங்கள் காதணிகளையும்

யாக்கோபினிடத்தில் கொடுத்தார்கள்; யாக்கோபு அவைகளை சீதேம் ஊர் அருகே இருந்த ஒரு கர்வாலி மரத்தின் கீழே புதைத்துப் போட்டான்" நியாயாதிபதிகள் 8:24-ல் இந்த காதணிகள் இஸ்மவேலராயிருந்தவர்களால் அணியப்பட்டிருந்தன என்று நாம் உறுதிப்படுத்தப்படுகிறோம். இந்த நிகழ்ச்சி, உண்மையான தேவனைவிட்டு பிரிந்து போனதற்கு அடையாளமாக அவர்கள் ஆபரணங்களை அணிந்தார்கள் என்பதை ஆணித்தரமாக எடுத்துக்காட்டுகிறது. யாக்கோபின் புத்திரர்கள் சில மோசமான பாவங்களை செய்தார்கள் என ஆதியாகமம் 34 காட்டுகிறது, அதற்காக பாவ சுத்திகரிப்பு செய்வதற்காகவே யாக்கோபு தன் குடும்பத்தோடு தேவனுக்கு முன்பாக சென்றான். இருதய சுத்தி செய்வதற்கும் மனந்திரும்புவதற்கும் இசைந்த நேரம் அது. தவறை சரிசெய்வதற்கும் தேவனுடைய ஆசீர்வாதத்தை அவர்கள் மேல் வருஷிக்கப்பண்ணுவதற்கும் எல்லா பிரயத்தனமும் செய்யப்பட்டது. அந்நிய தெய்வங்களோடு கூட புறஜாதியார் அணியும் ஆபரண பழக்கவழக்கமும் கைவிடப்பட்டது. காதணிகள் புறம்பே தள்ளப்பட்டன.

இதை போன்ற ஒரு சூழ்நிலையில் தான் யாத்திராகமம் 33:1-6 - ல் ஒரு சீர்த்திருத்தம் அரங்கேறியது. மோசே பத்து கட்டளைகளைப் பெறுவதற்காக மலையில் இருந்த சமயத்தில் முந்தின அதிகாரத்தில் ஒரு பயங்கரமான விசுவாசதுரோகம் நடைபெற்றது. பெரும்பாலான இஸ்ரவேலர்கள்

பொற்கன்றுக்குட்டியை வணங்கினார்கள், அதனால் கொள்ளை நோயும் அழிவும் அந்த தேசத்தை அச்சுறுத்தியது. மோசே அவர்களை மனந்திரும்பும்படி இந்த வார்த்தைகளைப் பேசுகிறார், "கர்த்தர் இன்றைக்கு உங்களுக்கு ஆசீர்வாதம் அளிக்கும்படி, இன்றைக்கு நீங்கள் அவனவன் தன்தன் மகனுக்கும் சகோதரனுக்கும் விரோதமாயிருக்கிறதினால், கர்த்தருக்கு உங்களைப் பிரதிஷ்டை பண்ணுங்கள்" (யாத்திராகமம் 32:29).

அடுத்த அதிகாரத்தில், பாவம் செய்து அந்த நாளின் அனுபவத்திலிருந்து இன்னமும் புறஜாதியாரின் கண்ணியில் விழுந்திருந்த மக்களுக்காக மோசே ஆசரிப்பு கூடாரத்துக்கு தேவனிடம் பரிந்து பேசச் சென்றான். இதற்கு முன்னால், யாக்கோபுக்கும் அவனுடைய குடும்பத்துக்கும் சொன்னது போல, இஸ்ரவேலின் மீட்புக்காக தேவன் கொடுத்த அறிவுறுத்தலில் ஆடை மாற்றமும் சேர்ந்திருந்தது. தேவன் சொன்னார், "ஏனென்றால், நீங்கள் வணங்காக் கழுத்துள்ள ஜனங்கள், நான் ஒரு நிமிஷத்தில் உங்கள் நடுவில் எழும்பி, உங்களை நிர்மூலம் பண்ணுவேன்; ஆகையால், நீங்கள் போட்டிருக்கிற உங்கள் ஆபரணங்களை கழற்றிப்போடுங்கள்; அப்பொழுது நான் உங்களுக்குச் செய்ய வேண்டியதை அறிவேன் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல் என்று கர்த்தர் மோசேயோடே சொல்லியிருந்தார். ஆகையால், இஸ்ரவேல் புத்திரர் ஒரேப் மலையருகே

தங்கள் ஆபரணங்களை கழற்றிப் போட்டார்கள்" (யாத்திராகமம் 33:5,6).

ஆபரணங்களை அணிவது குறித்து தேவனுடைய மனப்பான்மை என்ன என்பதை சந்தேகமில்லாமல் தெரிந்து கொண்டோம். மாறாத தேவன் அவைகளை அகற்றிவிட்டு அவர்களுடைய விசுவாசத்துரோகத்துக்கு பதில் சொல்லும்படி நியாயத்தீர்ப்புக்கு தங்களை ஒப்புக்கொடுக்க வேண்டும் என்றுரைத்தார். கவனித்து பார்க்க வேண்டிய விஷயம் என்னவென்றால் இந்த தடையானது அவர்கள் வாக்களிக்கப்பட்ட தேசத்தை அடைவதற்கு இந்த நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது. தேவன் சொன்னார், "நான் ஒரு தூதனை உங்களுக்கு முன்பாக அனுப்பி, கானானியனையும் எமோரியனையும்......துரத்திவிடுவேன்... நான் உங்கள் நடுவே செல்லமாட்டேன், நீங்கள் வணங்காக் கழுத்துள்ள ஜனங்கள்" (யாத்திராகமம் 33:2,3). வாக்களிக்கப்பட்ட தேசத்தை அடையுமுன்பதாக அவர்கள் ஆபரணங்களை அகற்ற வேண்டும் என்பது தெளிவாகிறது. இதில் நமக்கு எதாவது தொடர்பிருக்கிறதா? ஆம் இருக்கிறது. 1 கொரிந்தியர் 10:11-ல் பவுல் நமக்கு உறுதிபடுத்துகிறார், "இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவுக்காலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாகும்படி எழுதப்பட்டும் இருக்கிறது." 2-ம் வசனத்தில் சிவந்த சமுத்திர அனுபவத்தை ஞானஸ்நானத்தோடு ஒப்பிட்டு சொல்கிறார் மற்றும்

7-ம் 8-ம் வசனங்களில் யாத்திராகமம் 32-ல் காணப்படும் பொற்கன்றுக்குட்டியின் அனுபவத்தை இஸ்ரவேலுடைய விசுவாசதுரோகத்தோடு ஒப்பிட்டு பேசுகிறார். உடனே 11-ம் வசனத்தில் அவர்களுக்கு சம்பவித்த இவைகளெல்லாம் "நமக்கு எச்சரிப்புண்டாக" வைக்கப்பட்டிருக்கின்றன என்று விளக்குகிறார். தேவன் அவர்களின் விசுவாசத்துரோகத்தை கையாண்டவிதம் நமக்கு ஒரு பாடத்தைக் கற்பிக்கத்தான் என்பதை காட்டுகிறது. கானான் தேசத்திற்குள் அவர்கள் போகுமுன்பதாக ஆபரணங்களை அகற்ற வேண்டும் என்கின்ற இந்த கட்டளை பரம கானானுக்குள் போகுமுன்பதாக நமக்கும் பொருந்துகிறது. இந்த சூழலில் இது இணையாக இருப்பது தெளிவாகிறது.

வண்ணமிகு அழகுசாதன பொருட்களின் உபயோகம் பற்றி ஆரம்ப காலத்தில் இருந்த பதிவு 2 இராஜாக்கள் 9:30 - ல் காணப்படுகிறது. "யேசபேலைப் போல மையிட்டு" என்கின்ற சொற்றொடரின் ஆரம்பம் எது என அநேகர் கேள்வி கேட்டிருக்கின்றனர். அதற்கான பதில் இந்த வாசகத்தில் காணப்படுகிறது: "யெகூ யெஸ்ரயேலுக்கு வந்தான். அதை யேசபேல் கேட்டபோது, தன் கண்களுக்கு மையிட்டு, தன் தலையைச் சிங்காரித்துக்கொண்டு, ஜன்னல் வழியாய் எட்டிப்பார்த்து," நூற்றுக்கணக்கான தேவனின் தீர்க்கதரிசிகளைக் கொன்று போட்ட அபகீர்த்தியான ராஜாத்தியின் சரித்திரம் வேதாகம மாணாக்கர்களால் நன்கு அறியப்பட்டது. யேசபேலின்

வழக்கத்தை வேதாகம ஆரம்பக்காலத்தில் உற்று நோக்கினால், அது பரிசுத்தமற்ற சாயையை அந்த பழக்கம் நிச்சயமாகவே உருவாக்குகிறது. ஆனால், வண்ணமிகு அழகுசாதன பொருட்களின் உபயோகம் என்பது புறஜாதி ஸ்திரிகளின் மற்றும் அவிசுவாச ஸ்திரிகளின் தொடர் அடையாளமாக வேதாகம பதிவு முழுவதிலும் இருக்கிறது என்பதை சற்றுநேரத்தில் நாம் பார்ப்போம்.

ஏசாயா தீர்க்கதரிசி மூலமாக, வேதாகமத்தில் மற்ற இடங்களில் இருப்பதைக்காட்டிலும் அதிகமாக ஆபரணத்தைப்பற்றிய பெரும் கடுமையான கண்டனங்களில் ஒன்றை தேவன் அனுப்பினார். ஆபரணங்களை அணிவது பற்றி தேவனுடைய உணர்வுகளின் வெளிப்பாட்டை மிக நேரடியாக, தெளிவாக வேறெங்கேயும் நாம் பார்க்க முடியாது. ஏசாயா 3:16 - ல் தேவன் ஆபரணங்களைப்பற்றி பொதுவாக சொல்லாமல் “சீயோன் குமாரத்திகள்” அணிந்து கொண்டிருந்த சில ஆபரணங்களின் நீண்ட அட்டவணையைத்தருகிறார். இப்பொழுது, நேற்றும், இன்றும் என்றும் மாறாத தேவன் இவைகளை அணிவது பற்றி பிரியமாயிருக்கிறாரா என்று நாம் கவனிப்போம். “பின்னும் கர்த்தர் சொல்லுகிறதாவது: சீயோன் குமாரத்திகள் அகந்தையாயிருந்து, கழுத்தை நெறித்து நடந்து, கண்களால் மருட்டிப் பார்த்து, ஒய்யாரமாய் நடந்து, தங்கள் கால்களில் சிலம்பு ஒலிக்கத் திரிகிறார்கள்...அந்நாளிலே ஆண்டவர் அவர்களுடைய ஆபரணங்களாகிய சிலம்புகளையும், சுட்டிகளையும், பிறைச்சிந்தாக்குகளையும்,

ஆரங்களையும், அஸ்தகடகங்களையும், தலை முக்காடுகளையும், சிரபூஷணங்களையும், பாதசரங்களையும், மார்க்கச்சைகளையும், சுகந்த பரணிகளையும், தாயத்துகளையும், மோதிரங்களையும், மூக்குத்திகளையும்" (ஏசாயா 3:16-21).

நாம் இந்த வாசகத்தை இடைநிறுத்தம் செய்துவிட்டு ஒரு கேள்வியை எழுப்புவோம், இவை எல்லாவற்றையும் எப்படி தேவன் எடுத்துப்போடுவார்? அடுத்த அதிகாரத்தில் வசனம் 3-ல் நாம் வாசிக்கிறோம், "அப்பொழுது ஆண்டவர், சீயோன் குமாரத்திகளின் அழுக்கைக் கழுவி, நியாயத்தின் ஆவியினாலும், எருசலேமின் இரத்தபழிகளை அதின் நடுவிலிருந்து நீக்கிவிடும்போது," ஆண்டவர் இப்படிப்பட்ட ஆபரணங்கள் அனைத்தையும் "அழுக்கு" என்று சொல்கின்ற உண்மையை கவனியாமல் விடாதீர்கள், ஆபரணமாகிய "அழுக்கை" கழுவிய பிறகு பிழைத்திருப்பவர்கள் பற்றி வரைபடம் போல அவர் தொடர்ந்து விவரிக்கிறார், "இஸ்ரவேலில் தப்பினவர்களுக்கு அந்நாளிலே கர்த்தரின் கிளை அலங்காரமும் மகிமையுமாயிருக்கும்; பூமியின் கனி அவர்களுக்குச் சிறப்பும் அலங்காரமுமாயிருக்கும். சீயோனில் மீதியாயிருந்து, எருசலேமில் தரித்திருந்து ஜீவனுக்கென்று பேரெழுதப்பட்டவனெவனும் பரிசுத்தனென்று சொல்லப்படுவான்." (ஏசாயா 4:2,4).

ஆபரணங்களை அணிவதால் வரும் பெருமையின் வெளிப்பாடுகளை தேவன் வெறுப்பதை தைரியமாக, ஆணித்தரமாக தீர்க்கதரிசி

வெளிக் கொணர்கிறார். அந்த செயற்கையான அற்பமானவைகளைக் கழுவி விட்ட பிறகு ஸ்திரிகளை, "அலங்காரமான," "பரிசுத்தமான" மற்றும் "ரூபவதி" என்றழைக்கிறார். வெளிப்படையாக அழகை நாம் மதிப்பிடுவது போல அவர் மதிப்பிடுவதில்லை. பெண்கள் தங்களை அழகுப்படுத்துவதற்காக எல்லாவித ஆபரணங்களையும் அணிகிறார்கள், ஆனால் தேவன் சொன்னது அது அழுக்கானது. அதெல்லாம் கழுவப்பட்ட பிறகு, அவர் சொன்னார் அவர்கள் அலங்காரமாயும் ரூபவதிகளாயும் இருக்கிறார்கள். இந்த சத்தியத்தின் தீவிர முக்கியத்துவத்தை கவனிக்கத் தவறாதீர்கள். தேவன் சபையாகிய அவருடைய மணவாட்டியை "ரூபவதி" என வர்ணிக்கிறார், "செல்வமாய் வளர்ந்த ரூபவதியான சீயோன் குமாரத்தி" (எரேமியா 6:2).

அவருடைய ஜனங்களில் காட்டப்பட்ட மிகுதியான பெருமையின் மதிப்பீட்டினை பலப்படுத்துவது போல, தேவன் இப்படியொரு கவனத்தை ஈர்க்கிறார்: "அவர்கள் முகப்பார்வை அவர்களுக்கு விரோதமாய்ச் சாட்சியிடும்; அவர்கள் தங்கள் பாவத்தை மறைக்காமல், சோதோம் ஊராரைப்போல வெளிப்படுத்துகிறார்கள்; அவர்கள் ஆத்துமாவுக்கு ஐயோ! தங்களுக்கே தீமையை வருவித்துக் கொள்ளுகிறார்கள்." (ஏசாயா 3:9). வெளிப்புறமான அலங்காரத்தைக் குறித்த வெட்கக்கேடு பற்றி கேள்விக்கே இடமில்லை.

இந்த இடத்தில் தேவன் மோதிரங்களையும் "சீயோன் குமாரத்திகளின் அழுக்கு"களின் ஒரு பகுதி

என தேவன் சுட்டிக்காட்டுவதை நன்றாக கவனிக்க வேண்டும். எப்படிப்பட்ட மோதிரங்களைப்பற்றி அவர் பேசினார்? உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் உடனே பதிலளிப்பர், “என்னுடைய மோதிரம் நான் முதுநிலை மாணவன் என்பதற்கான அடையாளம். அது ஒரு ஆபரணமாக அணியப்படவில்லை. தேவன் மற்ற வேறுவிதமான மோதிரங்களைப்பற்றி தான் பேசுகிறார்.” மேசன் தன்னுடைய மேசனிக் மோதிரத்தை அனிந்து கொள்வதை நியாயப்படுத்த இதே போன்ற வார்த்தைகளைப் பேசுவார்: “தேவன் என்னுடைய மோதிரத்தைப்பற்றி பேசவில்லை. நான் இந்த மேசனிக் சபையை சேர்ந்தவன் என்பதை மட்டும் காட்டுகிறது,” அதற்கு பிறகு, பிறந்தநாள் மோதிரங்கள், நிச்சயதார்த்த மோதிரங்கள், மற்றும் திருமண மோதிரங்கள் என்றிருக்கின்றன- அவைகளும் அடையாளத்திற்காண அர்த்தங்களைப் பெற்றிருக்கின்றன. நாம் அணிந்திருக்கும் ஒன்றை நியாயப்படுத்திப்பேசுவது எவ்வளவு சுலபமாக இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் தேவன் அதைக்குறித்து ஒன்றும் பேசவில்லை எனவும் சாதிக்கிறோம். நாம் அணிந்துக் கொண்டிருப்பதைப்பற்றி தேவன் பேசவில்லை என்று நாம் எப்படி அறிந்து கொள்வது? அதை விட்டுவிட மனமில்லாத காரணத்தால் தேவன் நாம் அணிந்து கொண்டிருப்பதற்கு விதிவிலக்களித்திருக்கிறார் என்று சொல்வது அகந்தையான செயலல்லவா?

தேவன் “மோதிரங்கள்” என்று கூறிய போது அவர் என்ன அர்த்தத்தில் கூறினார்? குறிப்பிட்ட

ரகத்தைச் சேர்ந்த மோதிரங்கள் தான் என பொருள்பட்டாரா?

ஒரு நாள் என் தாயாரிடத்தில் இது போன்ற ஒரு கேள்வியைக் கேட்டேன். கேக்கின் மீது ஐசிங் (Icing) உறைய வைத்தப்பிறகு அதை எடுப்பதற்கு எனது தாயார் தடை விதித்திருந்தார்கள். வேலை முடிந்த பிறகு பாத்திரத்தின் அடியில் ஒட்டியிருப்பதை நான் சுரண்டி "பாத்திரத்தை நக்குவதற்கு" அனுமதிக்கப்பட்டிருந்தேன், ஆனால் கேக்கிலிருப்பதை எடுக்கக் கூடாது என்பது வீட்டின் சட்டமாகும்.

ஆனால் ஒரு நாள் அழகிய புத்தம்புதிய சாக்லேட் கேக்கை மேஜையின் நடுவில் வைத்துவிட்டு தாயார் கடைக்கு சென்றார். நான் தனியே விடப்பட்டிருந்தேன். இனிப்பு மிகுந்த ஐசிங் கேக்கிலிருந்து உருகி வழிந்து தட்டின் விளிம்பில் தேங்கி நின்றிருந்ததை நான் கவனித்தேன். சோதனை மிக அதிகமாயிருந்தது, வழிந்து கொண்டிருந்த ஐசிங்கை என்னுடைய விரலினால் வேகமாக சுரண்டி எடுத்தேன் - ஆனால் வேகம் போதவில்லை. அந்த சமயத்தில் தானே அம்மா வீட்டிற்குள்ளாக வந்துவிட்டார்கள்.

என்னை நம்புங்கள், அம்மா என்னை படுக்கை அறைக்கு வேகமாக இழுத்துச் சென்றபோது தவிர்க்க முடியாத ஒன்று நடக்கப் போவதை முன்கூட்டியே அறிந்து கொண்டேன். தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்ள அவசரத்தில் வேகமாக நான் பேசிய வார்த்தைகளை நான் இன்னமும் நினைத்துப்பார்க்கிறேன். அம்மா

சொன்னார்கள், “கேக்கிலிருந்து ஐசிங்கை எப்பொழுதும் எடுக்கக்கூடாது என்று உனக்கு சொல்லியிருக்கிறேன்.” வெற்றிகரமாக நான் பதிலளித்தேன், “ஆனால் நீங்கள் சாக்லட் கேக் என்று கூறவில்லையே”

எப்படியிருந்தாலும், இளம்பிராய சுருதிகுறைந்த தர்க்கத்தினால் ஞானமுள்ள என் தாயார் கொஞ்சம் கூட ஈர்க்கப்படவில்லை. அனைத்து ஞானத்தையும் பெற்றுள்ள பரலோக பிதாவிடம் “ஆனால் நீர் திருமண மோதிரத்தைப்பற்றி சொல்லவில்லை” என்று நாம் சொல்லும்போது அவர் எப்படி எடுத்துக் கொள்வார் என நான் வியக்கிறேன். அதுதான் உண்மை. அம்மா “கேக்” என்றுதான் சொன்னார்கள் மற்றும் தேவன் “மோதிரங்கள்” என்று சொன்னார், இது தேவனுடைய வெளிப்படுத்தப்பட்ட சித்தத்தை நாம் வெளிப்படையாக மீறுவது வார்த்தை ஜாலத்தால் குழந்தையைப்போல மாற்றிப்பேசி நியாயப்படுத்த முயற்சி செய்வதாகும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, நாம் ஏன் இந்த தலைப்பைப்பற்றி வேதாகமத்தை தேடிக்கொண்டிருக்கிறோம்? கர்த்தருக்கு மிகவும் பிரியமானது எது என்பதை கண்டுபிடிக்க நாம் முயற்சிக்கவில்லையா? அவருக்கு எது பிடிக்குமென இங்கும் அங்கும் நாம் தேடித்திரிவதில்லை. நம்முடைய முதல் முழு நோக்கம் அவருடைய சித்தத்தை அறிந்து அதன்படி நடப்பதேயாகும். நாம் அவரை அதிகமாய் நேசிக்கிறோம், அதனால் அவர் விரும்பாததை செய்வதில்லை. இதனால்

தான் உண்மையான கிறிஸ்தவன் வார்த்தை ஜாலங்களால் பேசி எப்படிப்பட்ட மோதிரத்தை அணியலாம் என்றோ தேவனுடைய சித்தத்துக்கு மாறாக பகுத்தறிவாக்கத்தை தேடுவதோ இல்லை. மோதிரங்களையெல்லாம் தள்ளி வைத்துவிடுங்கள். ஒரு அடையாள மோதிரத்தை அங்கிகரிக்கலாம் என்றால் எல்லா அடையாள மோதிரங்களையும் அங்கீகரிக்கலாம் என்பது வெளிப்படையான தெளிவாயிருக்கிறதல்லவா? திருமணத்துக்கு அடையாளமாக வெளிப்புறமான ஒன்றை அணியவேண்டுமென்பதற்கு வேதாகம முன்னுதாரணம் எந்த சந்தர்ப்பத்திலும் நாம் காணமுடிவதில்லை. திருமண மோதிரத்தின் வரலாறு புறஜாதியாரின் சூரிய வணக்கம் மற்றும் போப்பு மார்க்கத்தின் மூடநம்பிக்கை ஆகியவற்றின் கறை படிந்த ஒன்று. அதன் சார்பாக முன் வைக்கப்படும் ஒரு விவாதம் கூட அது கர்த்தருக்கு பிரியமானதல்ல என்கின்ற மாபெரும் உண்மைக்கு ஒப்பாக நிலை நிற்க முடிவதில்லை! ஒரு உலகபிரகாரமான கிறிஸ்தவன் ஒரு மோதிரத்தை அணிவதால் ஒருவன் இழக்கப்படுவான் என்பது சரியாக இல்லை என்று விவாதிக்கலாம். ஆனால் தேவனை பிரதானமாக நேசிக்கும் கிறிஸ்தவன் பரம நண்பரை அது பிரியப்படுத்துவதில்லை என்பதே எனக்கு போதும் என பதிலளிப்பார்.

தற்செயலாக, ஆரம்ப கால சபையின் விசுவாசதுரோகத்துக்கும் திருமண மோதிரத்தின் அறிமுகத்துக்கும் இடையே ஒரு இணைப்பு இருக்கும்

தெளிவான குறிப்பினை வரலாறு நமக்கு தருகிறது. பிரசித்திப்பெற்ற கத்தோலிக்க கார்டினல் ஜான் ஹென்றி நியூமான் என்பவர் 1845 - ல் தன்னுடைய டெவலப்மண்ட் ஆப் கிறிஸ்டியன் டாக்ட்ரின் என்கின்ற தன்னுடைய நினைவுச்சின்னமான புத்தகத்தில் பக்கம் 373 - ல் அதனை இவ்வாறு விவரிக்கிறார்: "புதிய மதத்தை புறஜாதியாருக்கு சிபாரிசு செய்வதற்காக, கான்ஸ்டன்டைன், ஏற்கனவே பழக்கத்தில் கொண்டிருந்த அவர்களுடைய வெளிப்புற அலங்காரத்தை அதற்குள் மாற்றிவைத்தார். புரோட்டஸ்டன்ட் எழுத்தாளர்களின் விடாமுயற்சியால் நம்மில் அநேகருக்கு பழக்கப்பட்டுவிட்டதால் இந்த பொருள் பற்றி பேசவேண்டிய அவசியமில்லை. ஆலயங்களின் உபயோகம் மற்றும் குறிப்பிட்ட பரிசுத்தவான்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட இவைகள்...தூபம்,...மெழுகுவர்த்தி,...பரிசுத்த நீர்,... ஊர்வலங்கள்,... திருமணத்தில் மோதிரம், கிழக்கு பார்த்து நிற்றல், பிற்காலக் கட்டத்தில் உருவசிலைகள்... இவையெல்லாம் அந்நிய மதத்தினரிடம் இருந்து வந்தவை மற்றும் இவைகள் சபையில் ஏற்றுக்கொள்வதின் மூலம் தூய்மையாக்கப்பட்டன."

அநேக மற்ற பழைய ஏற்பாட்டு எழுத்தாளர்களை போல, எரேமியா தீர்க்கதரிசி, செயற்கையான ஆபரணங்களை அணிந்து கொண்ட மக்களைப்பற்றி இன்னமும் அதிகமான ஆலோசனைகளைக் கூடுதலாகச் சொன்னார். தேவன் அந்த பரிசுத்த மனிதர்களை ஏவி

சபையை தீர்க்கதரிசனத்தின்படி ஒரு ஸ்திரிக்கு ஒப்பிட்டார். தேவ ஜனம் விசுவாசத்தை விட்டு பின்வாங்கிப்போன போது அவர்கள் சோரம்போன ஸ்திரியைப்போலவும் அல்லது உன்மையற்ற மனைவியைப்போலவும் சித்தரிக்கப்பட்டார்கள். அப்படியே இது போன்ற வசனங்களை வாசிக்கிறோம்: “பாழாய்ப்போன நீ இப்பொழுது என்ன செய்வாய்? நீ இரத்தாம்பரம் உடுத்தாலும், பொன்னாபரணங்களால் உன்னைச் சிங்காரித்தாலும், உன் கண்களில் மையிட்டுக்கொண்டாலும், வீணாய் உன்னை அழகுபடுத்துவாய், சோரநாயகர் உன்னை அசட்டைபண்ணி, உன் பிராணனை வாங்கத் தேடுவார்கள்.” (எரேமியா 4:30).

எசேக்கியேல் மூலமாக, தேவன் சோரம்போன யூதா மற்றும் இஸ்ரவேல் ஜனங்களை அகோவாள் மற்றும் அகோபிபாள் என்ற இரண்டு வேசிகளுக்கு அடையாளப்படுத்தினார். அவர்களுடைய வெளிப்படையான அலங்காரம் அவர்களின் மோசமான நடத்தைக்கு ஒத்திருந்ததாக அவருடைய சித்தரிப்பு இருக்கிறது. “இதுவுமல்லாமல், தூரத்திலுள்ள புருஷரிடத்திற்குத் தூது அனுப்பி, அவர்களை வரவழைத்தார்கள், அவர்கள் வந்தார்கள்; அவர்களுக்கென்று நீ குளித்து, உன் கண்களில் மையிட்டுக் கொண்டு, ஆபரணங்களால் உன்னை அலங்கரித்து,” (எசேக்கியேல் 23:40).

இஸ்ரவேலின் கபடத்தை விவரிக்கும்போது ஓசியா இது போன்ற சிந்தனையையே வெளிக்காட்டுகிறார். மறுபடியும்,

அவிசுவாசத்தன்மையை ஒரு அலங்கரித்துக் கொண்ட ஸ்திரிக்கு நாடகப்படுத்திக் காட்டுகிறார். "அவள் பாகால்களுக்குத் தூபங்காட்டி, தன் நெற்றிப்பட்டங்களினாலும் தன் ஆபரணங்களினாலும் தன்னைச் சிங்காரித்துக்கொண்டு, தன் நேசரைப்பின் தொடர்ந்து, என்னை மறந்துபோன நாட்களினிமித்தம் அவளை விசாரிப்பேன் என்று கர்த்தர் சொல்கிறார்." (ஓசியா 2:13).

மீண்டும் மீண்டும், வேதாகமம் வண்ணமிகு அழகுசாதன பொருட்களையும் ஆபரணங்கள் அணிவதையும் பாவம், விசுவாசத்துரோகம், மற்றும் புறஜாதித்துவம் ஆகியவையோடு இணைத்துக் காட்டுகிறது. அவர்கள் கர்த்தரிடமிருந்து பின்வாங்கிப்போன பின்பு அவர்கள் "தங்கள் பாவத்தை வெளிப்படுத்துகிறார்கள்" என்று ஏசாயா சொன்னது போல ஆபரணங்களை அணிந்துக் கொண்டார்கள். இந்த உண்மையை தெளிவாக மற்றும் சமநிலை மாறாமல் எடுத்துக்கூறும் வார்த்தைகளுக்குப் பஞ்சமே இல்லை - பரலோகத்தின் மாபெறும் தேவன் அவர்களுடைய சித்தத்திலிருந்து விலகிப்போனதை அடையாளமாக குறிக்கும் அவைகள்மீது அதிருப்தியானார்.

புதிய ஏற்பாட்டிற்கு வரும்போது, இதன் பார்வை இன்னமும் கூர்மையாக்கப்படுகிறது. வெளிப்படுத்தின விசேஷத்தில், யோவான் பாவத்தின் இரத்தாம்பர உடையணிந்த (தவறான சபைக்கு அடையாளமாக்கப்பட்ட) ஸ்திரியைப் பற்றி விவரிக்கிறார், " பொன்னினாலும்

இரத்தினங்களினாலும் முத்துக்களினாலும் சிங்காரிக்கப்பட்டு , தன் வேசித்தனமாகிய அருவருப்புகளாலும் அசுத்தத்தாலும் நிறைந்த பொற்பாத்திரத்தைத் தன் கையிலே பிடித்திருந்தாள். (வெளிப்படுத்தின விசேஷம் 17:4).

அதற்கு மாறாக, வெளிப்படுத்தின விசேஷம் 12:1 - ல் உண்மையான சபை சூரியனுடைய மகிமையை அணிந்த ஒரு அழகிய ஸ்திரிக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. வெளிப்படுத்தின விசேஷம் 21:9 - ல் இந்த ஸ்திரி கிறிஸ்துவின் மணவாட்டியாக அழைக்கப்படுகிறாள். கிறிஸ்துவின் மணவாட்டி எந்தவித ஆபரணத்தையும் அணியவில்லை என்பதை கவனியுங்கள். இந்த உண்மையான, தவறான மத அமைப்புகளின் அடையாளங்கள், தேவன் இப்படிப்பட்ட செயற்கையான அணிகலன்கள் மீது வைத்திருக்கும் மதிப்பினை சுட்டிக்காட்டுகின்றன.

பேதுரு, பவுல் ஆகியோரின் எழுத்துக்களின் கடைசி இரண்டு வாக்கியங்கள் உறுதியான, சீரான பார்வையுடன் இந்த பழக்கத்தைப்பற்றி ஆரம்பகால சபையில் இருந்தது குறித்து வெளிப்படுத்துகின்றன. இந்த இரண்டு உறுதியானவர்களும் சீஷ ர்கள் மத்தியில் செல்வாக்குள்ள இடத்தைப் பிடித்திருந்தார்கள், மற்றும் அவர்களுடைய ஆவிநிறைந்த நிருபங்கள் அப்போஸ்தல சபையின் சவாலே இல்லாத பார்வையை குறிக்கின்றன. பவுல் எழுதினார், “ஸ்திரீகளும் மயிரைப் பின்னுதலினாலாவது, பொன்னினாலாவது,

முத்துக்களினாலாவது, விலையேறப்பெற்ற வஸ்திரத்தினாலாவது தங்களை அலங்கரியாமல்,...... தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும், தங்களை அலங்கரிக்க வேண்டும்.” (1 தீமோத்தேயு 2:9,10).

பேதுரு இதுபோலவே எழுதினார், ஆனால் விசேஷமாக அவிசுவாசியான கணவன்மார்களைப் பெற்றிருந்த பெண்களுக்குப் பேசினார். “அந்தப்படி மனைவிகளே உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்: அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால், பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக் கொள்ளப்படுவார்கள். மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது: அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது.” (1பேதுரு 3:1-4).

பேதுருவின் இந்த வார்த்தைகள் இன்றைய சபையைச்சார்ந்த ஒவ்வொறு கிறிஸ்தவ மனைவிக்கும் ஆலோசனையைப் பெற்றிருக்கின்றன, மற்றும் இவைகள் விசுவாசத்தில் இல்லாத கணவர்களைப்

பெற்றிருக்கும் கிறிஸ்தவ பெண்கள் சந்திக்கும் குழப்பமான பிரச்சினைகளில் ஒன்றைப்பற்றி கையாள்கின்றன. மனம்மாறாத கணவனை பிரியப்படுத்த எவ்வளவு தூரம் விசுவாசியான மனைவி முயற்சி செய்ய வேண்டும்? வீட்டில் யாவும் சுமுகமாக செல்வதற்கும் கணவனை முடிந்தால் ஆதாயப்படுத்துவதற்கும் எந்த அளவுக்கு அவள் தேவனுடைய சத்தியத்தோடு சமரசம் செய்ய வேண்டும்? பேதுருவின் புத்திமதி எளிமையாகவும் சீரானதாகவும் இருக்கிறது. சத்தியத்தோடும் கொள்கையோடும் சமரசம் செய்யவே வேண்டாம். மனைவி, அவளுடைய விசுவாசத்தைப்பற்றி பேச அனுமதிக்கப்படாவிட்டாலும் அவள் தன்னுடைய “கற்புள்ள நடக்கையினால்” அவளுடைய கணவனை ஆதாயப்படுத்த முடியும், மற்ற மொழிப்பெயர்ப்புகளில் “நடக்கை” என்பதற்கு பதிலாக “நடத்தை” என சரியான பதம் பயன்படுத்தப்படுகிறது.

ஆனால் கிறிஸ்தவ மனைவியின் நடத்தையானது எவ்வாறு தன்னை வெளிப்படுத்துகிறது என்பதை கவனியுங்கள். அவள் வெளிப்புற அலங்காரத்தை உடனே விட்டுவிடுவதன் மூலம் தன்னுடைய கணவனை ஆதாயப்படுத்துவாள் என்று பேதுரு உறுதிபடுத்துகிறார். திருமண மோதிரத்தை அணிவது தேவனுக்கு பிரியமில்லாதது என்று அறிந்திருந்தும் தன் கணவனைப் பிரியப்படுத்த அவள் அதை அணிய வேண்டியிருக்கும் என்கின்ற சங்கடத்தை தேவ ஆவியானவர் நிச்சயமாகவே எதிர்பார்த்தார். இந்த வாக்கியம் தேவனுக்கு

முதலிடம் கொடுக்கவேண்டுமென மிகத்தெளிவாக காட்டுகிறது, மேலும் அப்படிப்பட்ட ஒரு முடிவு வேறு எந்த வழியைக் காட்டிலும் அதிகமாக கணவனை ஆயத்தப்படுத்த வழிகோலுகிறது. நூற்றுக்கணக்கான ஊழியக்காரர்களும் போதகர்களும் இது உண்மை என்பதற்கான சாட்சி கூறுவர். தங்கள் கணவர்களை இறுதியாக விசுவாசத்துக்குள் வழிநடத்தும் ஸ்திரீகள் தாம் தேவனுடைய வார்த்தையின் தரத்தை உயர்த்தி பிடிப்பவராக இருப்பர். தங்கள் தரத்தை சிறிய காரியங்களிலும் விட்டுக்கொடுத்து அவிசுவாச கணவர்களோடு இணக்கமாயிருப்பவர்கள்தாம் தங்கள் துணைவர்களை ஆதாயப்படுத்தாதவர்கள்.

இது எதிர்மறையாயிருப்பதைப் போல காணப்படலாம், ஆனால் நடைமுறைக்குரிய முடிவுகள் நிருபிக்கக்கூடியவை. மனைவி எல்லாவற்றிலும் தன்னைத்தானே வாழ்ந்து காட்டாத வரையில், கணவன் அது அவ்வளவு முக்கிமில்லாதது என எடுத்துக்கொள்கிறான். அவனுடைய இனிமையான கிறிஸ்தவ மனைவி ஏதோஒன்றை செய்வதிலே அதிகமான உடன்பாடு காட்டாதபோது அதன்மீது அவன் உற்சாகம் கொள்ளுவதில்லை. ஆனால் அவள் எல்லாவற்றிற்கும் மேலாக கர்த்தரைப் பிரியப்படுத்த ஒரு உறுதியான முடிவு எடுத்தால், அவனுக்குப் பிரியமில்லாத ஒன்றை அவனுக்கெதிரேயே செய்தாலும், “அந்த மதம் சார்ந்த ஒன்றை” கணவன் அது முக்கியமானதாயிருக்கவேண்டும் என ஆழமாக ஈர்க்கப்படுகிறான். அவனுடைய

உண்மையான உணர்வுகளைப்பற்றி ஒருவேளை ஒன்றும் சொல்லாமற் போகலாம். உண்மையில் அவன் பெரும் கோபத்தால் உந்தப்படலாம். ஆனால் அவனுடைய மனைவியின் உறுதியான நேர்மையான நிலைப்பாட்டினால் அவனுடைய மதிப்பும், வியப்பும் இரகசியமாக எழுப்பப்படலாம்.

தங்கள் திருமண மோதிரங்களை விட்டுக்கொடுக்க மனமில்லாத மனைவிகள் இப்படியொரு விவாதத்தை முன்வைப்பதை நாம் எதிர்பார்க்கலாம். அவர்கள் சொல்லுவது, "நான் திருமணமானவள் என்பதால் என்னுடைய திருமண மோதிரத்தை விட்டுவிட விரும்பவில்லை. நான் என் கணவரை பெருமையாக எண்ணுகிறேன். நான் திருமணமானவள் என்று எல்லாரும் அறிய வேண்டுமென விரும்புகிறேன். திருமணம் என்பது அதிக பரிசுத்தமானதும் முக்கியமானதுமாயிருக்கிறது என்று நினைக்கிறேன்." இந்த உண்மையான உணர்வுபூர்வ செயலுக்கு யாரும் குறை சொல்லமுடியாது. ஒவ்வொரு மனைவியும் தன் கணவனை நேசிக்க வேண்டும், அவரை பெருமையாக எண்ணவேண்டும். திருமணம் முக்கியமானது மற்றும் அவள் திருமணமானவள் என்று எல்லாறும் அறிய வேண்டும் என அவள் விரும்ப வேண்டும். ஆனால் இந்த கேள்வியை கேட்போம்: திருமணத்தைக்காட்டிலும் முக்கியமான ஒன்று ஒருவரின் வாழ்க்கையில் இருக்கின்றதா? ஆம், ஒரு கணவனுக்கோ அல்லது மனைவிக்கோ வாழ்க்கைப்படுவதைக்காட்டிலும் முக்கியமானது

ஒன்று இருக்கின்றது, அதுதான் கிறிஸ்துவோடு இணைக்கப்படுவது. கணவன் மனைவி இவர்களின் அன்பைக் காட்டிலும் முன்னுரிமை பெறுவது கிறிஸ்துவின் அன்பின் உரிமைகளாகத்தான் இருக்க வேண்டும், எல்லா அபரிமிதமான வேதாகம சான்றுகளையும் பாக்கும்போது, ஆபரணங்கள் கர்த்தருக்குப் பிரியமில்லாதது என்பதை நம்மால் கண்டுபிடிக்க முடிகிறது. திருமண மோதிரம் மனைவி தன் கணவனை மணந்திருக்கிறாள் என்பதை எல்லாருக்கும் எடுத்துச் சொல்லும் என்பது உண்மைதான், ஆனால் அது வேறொன்றையும் கூட சொல்லும். அவள் இயேசு கிறிஸ்துவை விரும்புவதைக் காட்டிலும் தன் கணவனை அதிகமாக பிரியப்படுத்துவதை தெரிந்து கொண்டாள் என்பதைச் சொல்லும். வேதாகமம் வெளிப்படுத்தும் தேவனின் சித்தத்தைவிட வேறொருவருடைய விருப்பத்தையே முன்வைக்கிறாள் என்பதை வெளிப்படுத்தும். அப்படியே, உலகத்திற்கு தவறான சாட்சியாக இது அமைகிறது.

இப்படிப்பட்ட ஒரு முடிவு மிகவும் கடுமையானது என சிலர் எதிர்ப்பு தெரிவிக்கலாம். சிலர் இப்படியும் சொல்லலாம், “ஒரு மோதிரம் அல்லது ஆபரணம் போன்ற சிறிய காரியத்தின் மூலமாக என்னுடைய கிறிஸ்துவத்தை நீங்கள் நியாயந்தீர்த்து சோதிக்கிறீர்கள்.” இல்லை, இது காரியமல்ல. தேவன்பால் நாம் வைத்திருக்கும் அன்பு சோதிக்கப்படுகிறது மற்றும் வேதாகமம் தெளிவாக சோதனைக்கான அளவுகோல்களை

சுட்டிக்காட்டுகின்றது. அந்த சோதனை தேவன் வெளிப்படுத்தின கட்டளைகளை மட்டும் கைக்கொள்வது என்பது மட்டுமல்ல, எதெல்லாம் தேவனைப் பிரியப்படுத்தாது என்பதை நாம் கண்டுபிடிக்கிறோமோ அதையெல்லாம் விலக்கிவைப்பதை உள்ளடக்கியது. அதற்கான ஆதாரம் இங்கே: "அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்கு முன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக்கொள்ளுகிறதெதுவோ அதை அவராலே பெற்றுக் கொள்ளுகிறோம்" (1 யோவான் 3:22).

உண்மை கிறிஸ்தவர்கள் எப்பொழுதும் செய்துகொண்டிருக்கும் இரண்டு காரியங்களை தயவுசெய்து கவனியாமல் விடாதீர்கள். தேவன் தன்னுடைய கட்டளையில் விடுக்கின்ற நேரடியான, வெளிப்படையான தேவைகளுக்கு அவர்கள் கீழப்படிகிறார்கள், ஆனால் அதுமட்டுமல்லாதபடிக்கு அவருக்கு பிரியமானது எது என்பதை ஆராய்ந்து பார்க்கிறார்கள். வேறு வார்த்தைகளில், அவர்கள் அவருடைய உத்தரவுக்குக் கீழ்ப்படிவார்கள், "கர்த்தருக்கு பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப்பாருங்கள்." (எபேசியர் 5:10). இயேசு அவருடைய சொந்த வாழ்க்கையிலும் போதகத்திலும் முன்னுதாரணமாய் செய்து காட்டினார். அவர் சொன்னார், "பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால் அவர் என்னைத் தனியேயிருக்கவிடவில்லை." (யோவான் 8:29). பொதுவான கட்டளைகள் உலகத்திலிருக்கும்

எல்லா மனிதனுக்கும் பொருந்தும், அனால் அவருடைய சித்தத்தின் சுட்டிக்காட்டுதலை தேடி கண்டுபிடிக்கும் கிறிஸ்தவனின் அன்பான இருதயத்துக்குதான் தேவனின் பிரியமான சிறுசிறு காரியங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. இயேசுவின் வருகையில் இரட்சிக்கப்படுவோருக்கு அடையாளமாக ஏனோக்கு இருந்தார் என்பது நிதர்சனமான உண்மை, “ஏனோக்கு மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான்; ... அவன் தேவனுக்கு பிரியமானவனென்று அவன் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னமே சாட்சி பெற்றான்.” (எபிரேயர் 11:5). பவுல், இயேசுவின் மகிமை பொருந்திய வருகையை 1 தெசலோனிக்கேயர் 4:16 - ல் விவரிக்கிறார். அதே வசனத்தில் மரித்த நீதிமான்களின் உயிர்தெழுதல் பற்றியும் உயிரோடிருக்கும் பரிசுத்தவான்களோடு அவர்கள் சேர்ந்து கொள்வது பற்றியும் படம்பிடித்து காட்டுகிறார். ஆனால் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு ஆயத்தமாயிருக்கிற பரிசுத்தவான்கள் பற்றி பேசும்போது பவுல் சொன்னார், “சகோதரரே, நீங்கள் இன்னின்ன பிரகாரமாய் நடக்கவும், தேவனுக்குப் பிரியமாயிருக்கவும் வேண்டுமென்று,... கர்த்தராகிய இயேசுவுக்குள் உங்களை வேண்டிக்கொண்டு புத்திசொல்லுகிறோம்.” (1 தெசலோனிக்கேயர் 4:1). பூமியிலிருந்து மீட்கப்பட்டவர்களுடைய அடையாளங்களில் ஒன்று அவர்கள் கர்த்தரை எல்லாவிதத்திலும் பிரியப்படுத்த தயாராயிருத்தல்.

கவனிக்கவும், ஒரு குறிப்பிட்ட காரியம் கர்த்தருக்கு பிரியமாயிருக்கிறது என்பதை நீங்கள் அறிந்திருந்தும் நீங்கள் அதனை செய்ய மறுக்கிறீர்கள் என்றால் உண்மையில் நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் கர்த்தரைக்காட்டிலும் வேறு யாரையோ பிரியப்படுத்துகிறீர்கள். நீங்கள் இப்படி சொல்லக்கூடும், "ஆனால் அது ஒரு சிறிய, சிறிய காரியம்." உண்மையில், அது ஒரு சிறிய காரியம்தான், ஆனால் ஒருவருக்கொருவர் செய்யப்படும் சின்ன சின்ன காரியத்தில்தான் அன்பு பரிசோதிக்கப்பட்டு நிருபிக்கப்படுகிறது. அது உண்மையா இல்லையா என்று எந்த இல்லத்தரசியிடமும் கேட்டுப்பாருங்கள். அவளுடைய கணவன் அவளுடைய பிறந்தநாளென்று துணிதுவைக்கும் இயந்திரத்தை பரிசாக கொடுக்கக் கூடும்; அவளும் அதைப் பாராட்டுவாள். ஆனால் வாரத்தின் மத்திய நாளில் பூக்கொத்துடன் வந்து அவளிடம், "தேனே, பாத்திரங்களை நான் காயவைக்கிறேன்" என்று சொன்னால் எந்த மனைவியும் துணிதுவைக்கும் இயந்திரத்தைப் பார்க்கிலும் இது மேலானது என சொல்லுவாள். ஏன்? ஏனென்றால் எதிர்ப்பார்க்கும் பெரிய பெரிய காரியங்களைச்செய்வதைவிட இப்படிப்பட்ட சின்ன சின்னச் செயல்களில்தான் அவனுடைய உன்மையான உணர்வுகள் வெளிக்காட்டப்படுகின்றன. நாம் கற்பனைகளைக் கைக்கொள்ளும்போது தேவன் அதில் பிரியப்படுகிறார், ஆனால்

கற்பனைகளையும் தாண்டிச்சென்று, வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் சிறு செயல்களை அவரை பிரியப்படுத்தச் செய்யும்போது உண்மையில் நமது அன்பை அதிகமாகக் காட்டுகிறோம்.

சரியும் தவறும் அதன் அளவின் வழியாக கணக்கிடப்படுவதில்லை; எப்பொழுதும் கணக்கிடப்படவும் கூடாது. கிறிஸ்தவனுக்கு பெரும் பிரச்சனையாயிருப்பது பாவத்தின் அளவு அல்ல, அதனுடைய தன்மைதான். வண்ணமிகு அழகுசாதன பொருட்கள், மோதிரங்கள் போன்றவை கர்த்தருக்குப் பிரியமானதல்ல என்கின்ற உண்மையை வேதாகமம் வெளிப்படுத்துகிறது. ஒரு குறிப்பிட்ட அளவு வண்ணமிகு அழகுசாதன பொருட்கள் தவறானது அல்லது ஒரு சிலவகையான அல்லது எண்ணிக்கையிலான மோதிரங்கள் அவருக்குப் பிரியமானதல்ல என்று தேவவார்த்தை வெளிப்படுத்தவில்லை. தேவனுடைய வெளிப்படுத்தப்பட்ட சித்தத்தை வேண்டுமென்றே சிறிதளவும் மீறினாலும் அது மோசமானது. தேவனுக்கு முதலிடம் கொடுப்பதற்கு மாறான உள்ளார்ந்த எதிர்ப்பினை இது எடுத்துக் காட்டுகிறது. இன்று பிசாசுக்கு பிடித்தமான விவாதம் இதுதான், "சின்னதாய்ச் செய்தால் நல்லது தான்," லோத்து மலைக்கு ஓடிப்போக பணிக்கப்பட்டபோது அவன் இப்படிப்பட்ட முட்டாள்தனமான விவாதத்தைதான் வைத்தான். சோதோமுக்கும், கொமோராவுக்கும் பக்கத்தில் இருக்கின்ற ஊருக்கு ஓடிப்போக அனுமதிக் கேட்டு கெஞ்சினான். அவனுடைய

விவாதம் இதுதான், “அது சின்ன ஊர்தானே”? (ஆதியாகமம் 19:20). சோதோமில் அவனுக்கு இருந்த அனைத்தையும் இழந்த பிறகு அவன் ஏன் அந்த ஊருக்குப் போக விரும்பினான் என்று உங்களால் புரிந்து கொள்ள முடிகிறதா? இன்னமும் இப்படிப்பட்ட பகுத்தறிவாக்கத்தை தான் இன்றைக்கு அநேக கிறிஸ்தவர்கள் பயன்படுத்துகிறார்கள். அவர்களுடைய மோதிரத்தின் அளவு பற்றியும், அல்லது பணிவின்மையின் அளவு பற்றியும் விவாதித்து கேள்வி எழுப்புகிறார்கள்.

தேவனுடைய சித்தத்தை எந்த அளவுக்கு மீறலாம் என்பதை கண்டுபிடிக்க மக்கள் முயற்சிப்பதை அறிய சாத்தான் சந்தோஷப்படுகிறான். இதனை ஒருபோதும் மறவாதீர்கள்; வேதாகம நிலைப்பாட்டிலிருந்து எந்த அளவுக்கு விலகிப்போகிறோம் என்பது அவ்வளவு முக்கியமல்ல, ஆனால் வழிவிலகிப்போவதே உண்மையான பிரச்சனையை உண்டாக்குகிறது. அடி எடுத்து வைத்தலின் அளவு பெரும் முக்கியமானதல்ல, ஆனால் எடுத்து வைக்கும் அடி எங்கே கொண்டு செல்கிறது என்பதே முக்கியம்.

சிலவேளைகளில் ஞானஸ்நானம் எடுக்கப்போகிறவர் திருமண மோதிரத்தை கழற்ற வேண்டும் என நிர்ப்பந்திக்கப்படுகிறார் என்று போதகர்கள் மீது குற்றம் சுமத்தப்படுகிறது. உண்மையில், மோதிரம் ஒரு பிரச்சனையே அல்ல என்பது அனுபவம் நிருபித்திருக்கிறது. மோதிரம் இன்னும் அதிகமான மோசமான பிரச்சனையின்

வெறும் அறிகுறியே ஆகும். முழு அர்ப்பணித்தலின் குறைபாடு, இருதயம் ஒப்புக்கொடுக்கப்படும் போதும், தேவன் வாழ்க்கையில் முதலிடத்தில் இருக்கும்போதும் ஒரு சின்ன மோதிரம் கிறிஸ்துவுக்கும் மனம் மாறப்போகிறவருக்கும் இடையே நின்று ஞானமுழுக்கு மூலமாக கிறிஸ்துவோடு இணைவதற்கு தடை செய்யக்கூடாது. கிறிஸ்துவின் மீது இருக்கின்ற அன்பு தன்னைக் காட்டிலும் அல்லது கணவரைக் காட்டிலும் அல்லது மனைவியைக் காட்டிலும் அதிக பலமாயிருக்கும்போது எந்த ஒரு பொருளும், விசேஷமாக ஒரு சிறிய உலோக மோதிரமும்கூட குறுக்கே நிற்காது.

## அத்தியாயம்- 3

# தடைக் கற்கள்

இந்த கடைசி அத்தியாயத்தில், எல்லாவற்றையும் விட அதிகமாக பேசப்படும் பொருள் என கருதப்படும் தலைப்பு பற்றி இன்னுமொரு வேதாகமச்சான்றின் அம்சத்தைப்பற்றி நாம் கருத்தில் கொள்வோம். ஆபரணம் தேவனுக்கு பிரியமானதல்ல என்பதை இன்னமும் ஒப்புக் கொள்ளாதவர்கள் எழுப்பும் மறுப்புக்கு இது பதிலளிக்கிறது. திருமண மோதிரம் பற்றியையும் உள்ளடக்கிய தற்காப்பின் கடைசி கோட்டையையும் மிக வெளிப்படையான விதத்தில் இந்த தலைப்பு உடைத்தெறிகிறது.

இந்த விஷயம் பற்றி பவுலின் நாவண்மை நிறைந்த உரையைப் பார்க்கும் முன்பாக,

முழுநேரமும் ஆத்தும ஆதாயத்தில் ஈடுப்பட்டிருக்கும் எல்லாருக்கும் தெரிந்த ஒரு உண்மையை நாம் நிலைநாட்டுவோம். சபையில் அங்கத்தினர்களான பிறகும் ஆபரணங்கள் அணிவது பற்றி விடாப்பிடியாய் இருப்பவர்கள் ஆர்வமுள்ள ஆத்துமாக்களின் பாதைக்கு தடைக்கற்களை உருவக்குகிறவர்களாக மாறுகிறார்கள். ஞானமுழுக்கு எடுக்கப்போகும் கடைசி நேரத்தில் கட்டுப்பாடற்ற ஒருசில அங்கத்தினர்களால் அநேக ஆண்களும் பெண்களும் ஞானமுழுக்கு பெறாதபடி திருப்பி விடப்பட்டிருக்கிறார்கள் எனும் அனுபவத்தைச் சொல்லி பெரும்பாலும் ஏதோஒரு ஊழிக்காரரோ அல்லது போதகரோ உங்கள் இருதயத்தை உடைத்திருப்பார்கள். வேதாகம சத்தியத்தையும் கிறிஸ்தவ நிலைப்பாடுகளையும் பற்றி சொல்லிக் கொடுக்கப்பட்டபின்பு, ஒருசில சபை அங்கத்தினர்களும், சிலவேளைகளில் சபை அலுவலகத்தினரும் மோதிரங்களையோ அல்லது வேறு ஆபரணங்களையோ அணிந்திருப்பதைப் பார்த்து இந்த ஞானமுழுக்கு எடுக்கப் போகின்றவர்கள் அதிர்ச்சியடைகிறார்கள். ஏமாற்றத்தினால் அநேகர் பின்னிட்டுச்சென்று சபையில் சேர்வதற்கே மறுக்கிறார்கள்.

யாரோ ஒருவர் மறுக்கக்கூடும், “அவர்கள் மக்களை அந்த அளவுக்கு பார்க்கக்கூடாது. அவர்கள் சத்தியத்தை ஏற்றுக்கொள்ளதான் வேண்டும் ஏனென்றால் அதுதான் சத்தியம்.” இது மிகவும் நல்லதுதான், உண்மையும் கூட,

ஆனால் ஞாபகத்தில் கொள்ளவேண்டியது, பிரசித்தமில்லாத வேதாகம செய்திகளை காணும்படி சிறுசிறு ஓட்டைகளைத் தேடிக் கொண்டிருக்கும் ஆத்துமாக்களோடு நாம் தொடர்பு கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு ஓட்டையையும் நிதானமாக அடைப்பதும் அவர்கள் முடிவில் முழு கீழ்ப்படிதலோடு ஒப்புக்கொடுக்க எல்லா விவாதத்தையும் தீர்த்து வைப்பதும் நம்முடைய வேலையாயிருக்கிறது. உண்மை என்னவென்றால், இந்த மக்கள் சபை போதிப்பதை சபையார் கைக்கொள்ள வேண்டும் என எதிர்பார்ப்பது அவர்களுடைய உரிமை என கருதுகிறார்கள். போதகர் தன்னுடைய முயற்சியால் மாதக்கணக்கில் வேதாகமப் பயிற்சி கொடுத்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை ஆயத்தப்படுத்தினால் அதனை ஒருசில சீரற்ற அங்கத்தினர்கள் கெடுத்துப்போடக் கூடும். இன்னொரு தனி நபருக்கு யாராகிலும் தடைக்கல்லாயிருப்பது சரியல்ல.

கிறிஸ்தவ வளர்ச்சியில் தனியொருவரையும் அதைரியப்படுத்துவோரை மிகவும் கம்பீரமாக எச்சரித்து பவுல் எழுதினார். "நாம் இனிமேல் ஒருவரையொருவர் குற்றவாளிகளென்று தீர்க்காதிருப்போமாக. ஒருவனும் தன் சகோதரனுக்கு முன்பாகத் தடுக்கலையும் இடறலையும் போடலாகாதென்றே தீர்மானித்துக்கொள்ளுங்கள்" (ரோமர் 14:13). இயேசு இதே தலைப்பில் பேசினார். அதுமட்டுமல்லாமல் சிறு குழந்தைகளுக்கு இடறலுண்டாக்கும் பெருங்கொடுமைப் பற்றி

விவரித்தார். சிறியோர் ஓய்வுநாள்பள்ளி ஆசிரியர்களை மனதில் வைத்து இதனை படித்தால் அநேகமாய் அவருடைய வார்த்தைகள் இன்னும் அதிகமான அர்த்தத்தை கொடுக்கும், “என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் ஏந்திரக்கல்லைக் கட்டி, சமுத்திரத்தின் ஆழத்திலே அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும்.” (மத்தேயு 18:6). உண்மையில் தீவிரமான வார்த்தைகள்! ஆனால் அது சித்தரிக்கும் பாதிப்பைவிட அதிகமான தீவிரமானதல்ல - தங்களுடைய முன்மாதிரிகளாக ஆசிரியர்களைப் பார்க்கும் சிறுபிள்ளைகளை தவறாக வழிநடத்துவது, தங்கள் அபிமான ஆசிரியரின் விரலில் இருக்கும் மோதிரத்தைப் பார்த்த பிறகு எத்தனை முறை சிறு பெண்கள் மோதிரம் பற்றிய வேதாகம நிலைப்பாட்டைப்பற்றி கேள்வி கேட்டிருப்பர்?

ஒரு குறிப்பிட்ட சபையில், திருமண மோதிரம் அணிந்திருந்த ஒரு மழலையர் பள்ளி ஆசிரியரை அவர் வகுப்பில் இருந்த ஒரு சிறு பெண் அவரை உதாரணமாக பார்த்தாள். சபையின் ஆராதனை வேளையில் அந்த சிறு பெண் ஆசிரியையோடும் அவள் கணவனோடும் அமர்வதற்கு அடிக்கடி அனுமதிக்கப்பட்டாள். அவர்களுக்கு குழந்தை இல்லாத காரணத்தால், நன்னடத்தையுள்ள அந்த சிறுமி அவர்களோடு அமர்வதற்கு அந்த ஜோடி சந்தோஷப்பட்டார்கள். சிறுமி பொதுவாக ஆசிரியையின் கைப்பையிலிருக்கும் பொருட்களோடு

நேரத்தை செலவிடுவாள், ஆனால் அவளின் பாசம் நிறைந்த குணத்தால் எல்லா நேரமும் ஆசிரியையின் கரத்தைப் பிடித்திருப்பாள். ஒரு ஓய்வுநாளின் பிரசங்க வேளையில், அந்த பெண்மணி சிறுமியை கவனித்தபோது, தன்னுடைய திருமண மோதிரத்தை அந்த சிறுமி எடுத்து அவளுடைய சுண்டுவிரலில் போட்டிருப்பதைக் கண்டாள். சற்றே குழம்பிப்போன அவள் அந்த மோதிரத்தை அவளிடமிருந்து எடுத்து தன்விரலில் மாட்டிக்கொண்டாள்.

ஒவ்வொரு வாரமும் அவளுடைய பெரும் குழப்பத்திற்கு மத்தியில், அந்த மோதிரத்தின் மீது சிறுமிக்கு இருந்த அதீத பற்றுதலை கவனித்தாள். மோதிரத்தை அவள் நேசித்து, தழுவுவாள். மேலும் அவளையும் அறியாமல் தன்னுடைய பிஞ்சு விரலில் போடுவதற்கு அதனை எடுக்கப் பார்ப்பாள். அந்த பொன் வளையத்தின் மீது சிறுமிக்கு ஏற்பட்ட வளர்ப்பிறையான கவர்ச்சி அந்தப் பெண்மணிக்கு அதிக கவலையை ஏற்படுத்தியது. ஆபரணங்கள் அணிவது பற்றி வேதாகமத்தின் போதனைகளை அறிந்திருந்த அவளுக்கு அதை அணிந்து கொண்ட நாளிலிருந்து அவளுடைய மனசாட்சிக்கு உறுத்தலாகவே இருந்தது. சிறுமியினுடைய கவனத்தை திருப்புவதிலேயே நேரம் செலவழித்த காரணத்தால் அவளால் ஆராதனையின் தொழுகையை மகிழ்வுடன் கழிக்க முடியவில்லை.

கடைசியில் அதனை அவளால் தொடர்ந்து பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அந்த சிறுமியின் பாதையில், தான் ஒரு தடைக் கல்லாக

இருக்கிறோமோ என்கின்ற ஆழமான குற்ற உணர்வுடன் தடையாயிருந்த அந்த மோதிரத்தை கழற்றி விட்டாள். பிற்பாடு, இந்த அனுபவத்தை, அவளுடைய போதகரிடம் எடுத்துச்சொல்லி, அந்த ஒன்றுமறியா சிறு பெண்ணிற்கு தான் கொடுத்த சோதனையின் மன உறுத்துதலால் அவள் வாதிக்கப்பட்டது பற்றி விவரித்துச் சொன்னாள்.

"ஆனால் மோதிரங்களில் எந்த தவறையும் நான் பார்க்கவில்லை. வேறு ஒருவரை கவர்வதற்காக நான் ஏன் மோதிரத்தை எடுத்துவிட்டு ஒரு ஏமாற்றுக்காரன் போல் காணப்பட வேண்டும்?" இந்த ஒரு கேள்விக்காகத்தான் பவுல் அழிக்கும் திறனுடன் 1 கொரிந்தியர் 8:1-13 - ல் பதிலளிக்கிறார். அந்த முழு அதிகாரமும் விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்ட போஜனத்தின் பிரச்சனைப்பற்றியது. இந்த பிரச்சனையினால் ஆதிகால சபை தீவிரமாக பிரிந்திருந்தது. புறமதவாதத்திலிருந்து வந்திருந்த புறஜாதி கிறிஸ்துவர்கள் அப்படிப்பட்ட போஜனத்தை சாப்பிடுவது தவறு என நம்பினார்கள். விக்கிரகங்களுக்கு பலியிடப்பட்ட போஜனமாகவே அதனை நினைவுக்கூர்ந்தார்கள். இப்பொழுது அவர்கள் கிறிஸ்தவர்களாக மாறினபோதும் இன்னமும் அதனை உண்பது விக்கிரகங்களுக்கு தங்கள் ஆதரவை காட்டுவது போல இருந்தது. அதற்கு மாறாக, யூதமதத்திலிருந்து வந்த யூத கிறிஸ்தவர்கள் அந்த போஜனத்தை சாப்பிடுவது மிகவும் சரியே என கருதினர். போஜனம் "அசுத்தம்" அல்லாதது என்றும், அது கடைவீதியில் மற்ற உணவுப்பொருட்களோடு

விற்கப்பட்டதாயிருந்தாலும், யூத கிறிஸ்தவர்கள் மனசாட்சிப்படி எந்தவித கேள்வியும் இல்லாமல் அதை வாங்கினர்.

இரண்டு குழுவினருக்கும் இடையே இருந்த சர்ச்சை கடுமையான காரணத்தால் பவுல் அதைக்குறித்து 1 கொரிந்தியர் 8-ல் மிக விரிவாக எடுத்துரைக்க வேண்டியதாயிருந்தது. இந்த விஷயத்தில் அவருடைய முடிவினை கவனியுங்கள்: "விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளை புசிக்கிற விஷயத்தைப்பற்றி, உலகத்திலே விக்கிரகமானது ஒன்றுமில்லையென்றும் ஒருவரேயன்றி வேறொரு தேவன் இல்லையென்றும் அறிந்திருக்கிறோம். ...ஆகிலும் இந்த அறிவு எல்லாரிடத்திலும் இல்லை. சிலர் இன்றையவரைக்கும் விக்கிரகத்தை ஒரு பொருளென்று எண்ணி, விக்கிரகத்துக்குப் படைக்கப்பட்டதைப் புசிக்கிறார்கள்; அவர்களுடைய மனசாட்சி பலவவீனமாயிருப்பதால் அசுசிப்படுகிறது..... ஆகிலும் இதைக்குறித்து உங்களுக்கு உண்டாயிருக்கிற அதிகாரம் எவ்விதத்திலும் பலவீனருக்குத் தடுக்கலாகாதப்படிக்குப் பாருங்கள். எப்படியெனில், அறிவுள்ளவனாகிய உன்னை விக்கிரகக்கோவிலிலே பந்தியிருக்க ஒருவன் கண்டால், பலவீனனாயிருக்கிற அவனுடைய மனச்சாட்சி விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளைப் புசிப்பதற்குத் துணிவு கொள்ளுமல்லவா? பலவீனமுள்ள சகோதரன் உன் அறிவினிமித்தம் கெட்டுப்போகலாமா? அவனுக்காகக் கிறிஸ்து மரித்தாரே. இப்படிச்

சகோதரருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்து, பலவீனமுள்ள அவர்களுடைய மனச்சாட்சியைப் புண்படுத்துகிறதினாலே, நீங்கள் கிறிஸ்துவுக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்கிறீர்கள்."
(1 கொரிந்தியர் 8:4-12).

மற்றவர்கள் மீது செலுத்தப்படும் அன்பின் ஆவிக்குறிய பார்வையுடன் இந்த பிரமாண்டமான வசனங்கள் சபையிலும் மோதிரங்களை அணியலாம் என தன்னிச்சையாக நினைக்கிறவர்களுக்கும்கூட அதிகமான உந்துதலோடு பொருந்துகின்றன. பயன்பாடு பலமுள்ளதாயிருக்கிறது ஏனென்றால் ஆபரணங்கள் தேவனால் கண்டிக்கப்படுகின்றன, ஆனால் விக்கிரகங்களுக்குப் படைக்கப்படும் போஜனங்கள் கண்டிக்கப்படவில்லை. அப்படிப்பட்ட போஜனத்தை உண்பது பாவம் என பவுல் கூறினார் ஏனென்றால் வேறு ஒருவருக்கு அது தடைகல்லாகவோ அல்லது இடறலாகவோ இருந்தது. நம்மோடிருக்கும் மற்ற கிறிஸ்தவர்களுக்கு இதுபோலவே மோதிரங்கள் தடைகற்களாய் இருப்பதினால், இப்படிப்பட்ட ஒரு குற்றம் "கிறிஸ்துவுக்கு எதிரான பாவம்" என்கின்ற முடிவெடுத்தலிலிருந்து நாம் தப்பமுடியாது.

இந்த சிறிய புத்தகத்தின் மையக்கருத்துக்கு இது நம்மை எடுத்துச் செல்கிறது - "அன்பு." தேவனை நேசித்து அவரை பிரியப்படுத்துகிறோம் என்கின்ற வகையில் நம்முடைய கிறிஸ்தவ கொள்கைகளை பார்த்தாலும் சரி, அல்லது சகமனிதரை நேசிக்கிறோம் என்றாலும் சரி, முடிவு என்னமோ

ஒன்றுதான். மொத்த கருத்தும் எல்லாவற்றிலும் சுயத்தைக் கடைசியில் வைப்பதுதான். அப்படிப்பட்ட அன்பின் அடிப்படையில் இருக்கும் ஒரு மதம் வெறும் பத்து கற்பனைகளின் வாாத்தைகளால் திருப்தி கொள்வதில்லை அதோடு தேவனுடைய சித்தத்தைக்காட்டும் குறிப்புகளையும் தினமும் தேடும். யோவான் நம்மை ஞாபகப்படுத்துவதுபோல: “அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்கு முன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியினால்” (1 யோவான் 3:22).

நீங்கள் இதுவரையில் படித்தது பற்றி நான் உங்களிடம் ஒரு கேள்வியை கேட்கலாமா? ஆபரணங்கள் அணிவது பற்றி இந்த செய்தி ஏதாகிலும் சந்தேகம் எழுப்பியிருக்கிறதா? வேதாகமம் முழுவதும் இங்கும் அங்குமாக காணப்படும் வசனங்களின் ஆதாரம் இந்தப் பழக்கம் கேள்விக்குறிய ஒன்று என பரிந்துரைக்கின்றதா? ஒரு தம்பதியினர் சொன்னார்கள், “ஒரு துண்டு ஆபரணத்தை அணிவதினால் தேவன் எங்களை பரலோகத்திலிருந்து தள்ளிவைத்திடுவார் என்று நாங்கள் இன்னமும் நம்பவில்லை.” நான் அவர்களைக் கேட்டேன், “அதை அணிவதினால் நீங்கள் இழக்கப்படமாட்டீர்கள் என நம்பினாலும், அநேக வசனங்களில் கொஞ்சமாவது தேவனுடைய முழு ஒப்புதலைப் பெற இந்தப் பழக்கம் கேள்விக்கு இடமளிக்கிறது என்பதை காணவில்லையா?” “ஓ, ஆமாம்,” அவர்கள் சொன்னார்கள், “இந்தக்காரியம் மறைக்கப்படக்கூடிய ஒன்று என நாம் சொல்ல

முடியாது." என்னுடைய அடுத்த கேள்வி இதுவாக இருந்தது: "உங்களுடைய மோதிரத்தை அணிவது என்பது 10 சதவீதமாவது தேவனுக்கு பிரியமானதல்ல என்று நீங்கள் நினைக்கின்றீர்களா?" கொஞ்ச நேரம் யோசித்துவிட்டு அது கேள்விக்குரியது தான் என்பதற்கு அடையாளமாக அந்த அளவுக்கு வாய்ப்பிருக்கிறது என்று இருவரும் ஒப்புக் கொண்டனர். பிறகு நான் அவர்களிடம் இந்த கேள்வியைக் கேட்டேன்: "உங்கள் வாழ்க்கையை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முழுமையாக ஒப்புக்கொடுத்து ஞானஸ்நான விளிம்பில் நிற்கின்ற வேளையில், உங்களுக்காக தன்னுடைய முழு ஜீவனையே அளித்த கர்த்தரை 10 சதவீதம் பிரியப்படுத்தாமலிருக்க வாய்ப்பு கொடுப்பீர்களா?"

மெதுவாக தங்கள் கரங்களில் இருந்த மோதிரங்களை எடுக்க ஆரம்பித்தார்கள். "இல்லை" கணவர் சொன்னார், "கொஞ்சம் அளவு கூட அவரை அதிருப்திபடுத்தும் வாய்ப்பை நாங்கள் கொடுக்க விரும்பவில்லை. எல்லா வழிகளிலும் இயேசுவோடுகூட செல்ல விரும்புகிறோம். ஒரு சந்தேகம் இருப்பதினால் சந்தேகத்தின் பலனை அவருக்குக் கொடுப்போம்."

இப்படிப்பட்ட ஒப்புக்கொடுத்தல் சுலபம் என்று சொல்லி நான் பாவனை செய்ய முயற்சிக்க மாட்டேன். இயேசு சொன்னார், "ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன்சிலுவையை அனுதினமும் எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்" (லூக்கா 9:23).

தனக்குத்தானே “இல்லை” என்று சொல்லுவதைப்பற்றிதான் ஆசிரியர் பேசினார். சுயநலத்தை விட்டுக்கொடுக்க விரும்பாத ஏதோ ஒன்றுடன் ஒவ்வொருவரும் யுத்தம் நடத்த வேண்டியிருக்கிறது என அவர் சொன்னார். கிறிஸ்துவிடம் வந்து அவருடைய வழிகளைக் கற்றுக்கொள்ளும் ஒருவர் தன்னைத்தான் வெறுத்து இதுவரை எதன்மீது தீராத ஆசை கொண்டிருந்தாரோ அதற்கு “இல்லை” என்று சொல்லவேண்டும். இதுதான் தன்னைத்தானே வெறுத்தல் என பொருள்படும். சில மக்கள் இந்த பரீட்சையில் ஒரு இடத்திலோ அல்லது வேறொரு இடத்திலோ தோற்றுப்போகக்கூடும். பண விஷயத்தில் சிலர் தங்களை வெறுக்கமுடியாத நிலையில் இருப்பதை நான் பார்த்திருக்கிறேன். தேவனுக்குக் கீழ்ப்படிதல் என்பது அவர்களுடைய வேலைக்கு ஆபத்தாகவோ அல்லது சம்பளபிடித்தமாகவோ மாறலாம், மற்றும் அவர்களுடைய பண ஆசைக்கு “இல்லை” என்று சொல்லமுடியாமற்போனது. மற்றவர்கள் கிறிஸ்துவை பின் தொடர்வதற்கு தங்கள் நண்பர்களை விட்டு கொடுக்க வேண்டியதாயிருந்தது, மற்றும் அவர்கள் தங்கள் நண்பர்களை விட்டுக்கொடுக்க விரும்பாதிருந்தார்கள். மது, புகையிலை அல்லது வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் அசுத்த உணவுகள் ஆகியவற்றை மறுப்பதற்கு மனமில்லாதவர்களாகிய அநேகருக்கு உண்ணும் வேட்கை குறுக்கே நிற்கிறது. ஒருசிலர் ஆணவம், பெருமை ஆகியவற்றின் சோதனைகளில் தோற்றுப்போயிருக்கிறார்கள்.

ஆடையின் மிகுதியான பெருமையில் அவர்கள் தங்களை வெறுக்க மனமில்லாதிருக்கிறார்கள்.

சுவிசேஷ கூட்டங்களில் பங்கெடுக்கும் மக்களை சத்தியம் எப்படி களையெடுக்கிறது என்பதை பார்க்கும்போது எப்பொழுதும் சுவாரசியமாக இருக்கும். வாழ்க்கையிலும் பழக்கவழக்கத்திலும் மாற்றம் தேவை என்று தேவனுடைய விருப்பத்தைச் சொல்லும்வரை ஒருவரும் கூட்டத்தை விட்டு நிற்கமாட்டார்கள். தேவனுடைய ஆலோசனைகளை எல்லாம் நாம் பிரசங்கிக்கவில்லையென்றால் கவனிக்கும் பெரும்பாலான மக்கள் அழைப்பிற்கு சந்தோஷமாக செவிகொடுப்பர். சத்தியம் சுயமுக்கியத்துவத்துக்கு சவால் விடும்போது போராட்டம் நடைபெறுகிறது. ஓய்வுநாள், தசமபாகம் மற்றும் உணவு பழக்கம் ஆகியவற்றின் சோதனைகள் எல்லாம் சுய இயல்வின் சில அம்சங்களை குறிவைக்கின்றன. இந்த ஒவ்வொறு விஷயத்திலும் நிறையபேர் தோற்றுப்போகின்றனர். ஆனால் அதிசய விதமாக, தேவனின் சித்தம் சுய கவுரவத்தின் பகுதியை தொடும்போது மாபெரும் போராட்டம் தொடர்வதுபோல தோன்றுகிறது. தற்பெருமை ஆழமாகவும் வியாபித்தும் இருக்கிறது. சுயஅன்பு ஆயிரக்கணக்கான முகங்களைப்பெற்று அதனுடைய நுண்ணிய வழிகளை தனக்குத்தானே வெளிக்காட்டுகிறது.

கோடிட்டு வையுங்கள், ஒவ்வொரு ஆத்துமாவிற்கும் ஏதோ ஒரு வழியில் தேவனுடைய சித்தத்துக்கு எதிராக நிற்க

சாத்தான் தன் கடைசி துணிச்சலான முடிவாக சுயத்தை உபயோகப்படுத்துகிறான். தங்கள் முழு இருதயத்தோடும், ஆத்துமாவோடும், மனதோடும் யாரெல்லாம் தேவனை நேசிக்கின்றார்களோ அவர்கள் மட்டுமே 100 சதவீதம் தேவைப்பட்டதையெல்லாம் அவருக்கு என்று ஒப்புக்கொடுப்பார்கள் அல்லது ஒப்புக்கொடுக்க விரும்புவார்கள். எல்லாவற்றிலும் தேவனைப் பிரியப்படுத்துவதற்கு இடையில் ஒன்றையும் குறுக்கிட விடாதவர்கள்தாம் உலகத்தில் சந்தோஷம் நிறைந்த மக்கள்.

கர்த்தருக்கு பிரியமாய் நடக்கும் கிறிஸ்தவர்களே உலகத்தில் சந்தோஷமான மக்கள் என ஏற்கனவே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இயேசு சொன்னார், நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள். என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும், இவைகளை உங்களுக்குச் சொன்னேன்." (யோவான் 15:10,11). இதனால், தங்களை முழுமையாக ஒப்புக்கொடுத்த கிறிஸ்தவர்களை இனம் காண்பது எளிது என்பதில் ஆச்சரியமில்லை. அங்கே ஒரு பரிசுத்த கதிரியக்கம் உருவாகி, முகத்தோற்றத்தையும் மாற்றுகின்ற ஒருமகிழ்ச்சி உள்ளுக்குள் ஒளிர்கிறது. உலகத்தின் அலங்காரங்களை அவர்கள் புறம்பே

தள்ளியிருந்தாலும், அவர்களை உடனே இனம் காட்டுகின்ற ஆவியானவர் எனும் வேறொரு அலங்காரத்தைப் பெற்றிருக்கிறார்கள். சில பெண்மணிகள் ஆபரணத்தைக் களைத்தப்பிறகு ஏறக்குறைய நிர்வாணமாயிருப்பது போல உணர்கிறார்கள், ஆனால் செயற்கையான ஒன்றிலிருந்து நிஜமான ஒன்றிற்கு மாற்றம் செய்யப்பட்டிருப்பதை வெகு சீக்கிரத்தில் அங்கீகரிக்கின்றார்கள். தாவீது எழுதினார், “அவர்கள் அவரை நோக்கிப்பார்த்துப் பிரகாசமடைந்தார்கள்; அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை” (சங்கீதம் 34:5).

புதிதாய் பிறந்திருக்கும் கிறிஸ்தவர்களின் இந்த “புதிய தோற்றம்” தான் உலகத்தை ஆச்சரியப்பட வைக்கிறது. கைவிடப்படும் ஒவ்வொரு தீமையானவற்றிற்கும் தேவனுடைய பிள்ளைகள் ஒரு ஆவிக்குரிய மாற்றீடு பெறுகிறார்கள். பவுல் சொன்னது போல, “அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு, ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக் கொள்ளக்கடவோம்.” (ரோமர் 13:12). இந்த வியத்தகு பரிமாற்றம் வஸ்திரங்களையும் நகைகளையும் உள்ளடக்கியது என்றால் அது எவ்வளவு பிரமாண்டமாயிருக்கும் என தயவுசெய்து கவனியுங்கள். கிறிஸ்துவின் மணவாட்டி விசேஷ கவனத்தைப் பெறுகிறாள். ஏசாயா தேவனுடைய பிள்ளைகளின் கலியாண வஸ்திரத்துக்கும் உலகப்பிரகாரமாண கலியாண வஸ்திரத்துக்கும் உள்ள வித்தியாசத்தை காட்டுகிறார். “கர்த்தருக்குள்

பூரிப்பாய் மகிழுகிறேன்; என் தேவனுக்குள் என் ஆத்துமா களிகூர்ந்திருக்கிறது மணவாளன் ஆபரணங்களினால் தன்னை அலங்கரித்துக் கொள்ளுகிறதற்கும், மணவாட்டி நகைகளினால் தன்னைச் சிங்காரித்துக் கொள்ளுகிறதற்கும், ஒப்பாக, அவர் இரட்சிப்பின் வஸ்திரங்களை எனக்கு உடுத்தி, நீதியின் சால்வையை எனக்குத்தரித்தார்." (ஏசாயா 61:10). நாம் கிறிஸ்துவுடன் மணமுடித்து அவருடைய நாமத்தை தரித்துக் கொள்ளும்போது நாம் உலகப்பிரகாரமான மணவாளன் மணவாட்டி போல நம்மை அலங்கரித்துக் கொள்வதில்லை. நாம் சந்தோஷமாக "இரட்சிப்பின் வஸ்திரங்களினாலும்", "நீதியின் சால்வையினாலும்" உடுத்துவிக்கப்பட வேண்டும். இதுதான் முகத்தை பிரகாசிக்கவைத்து இந்த உலகம் ஆச்சரியப்படுமளவு புதிய ஒளிவீசும் தோற்றத்தை வெளிக் கொணர்கிறது.

இந்த இன்றியமையாத விஷயம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். முகம் ஒருவருடைய குணலட்சணத்தைப்பற்றியும் அனுபவத்தைப்பற்றியும் அதிகமாக எடுத்துச் சொல்கிறது. நம்முடைய பெரும்பாலான மகிமை வாய்ந்த கிறிஸ்தவ சாட்சி என்பது நம்முடைய பளபளக்கும் முகத்தோற்றத்தின் சாட்சியே ஆகும். நான் கேள்விப்பட்டதில், ஏற்றுக்கொள்ளக்கூடிய பெரும்பாலான விஷயங்களில் ஒன்று இந்த அடிப்படையில்தான் வண்ணம் மிகுந்த அழகுசாதனத்தின் உபயோகத்துக்கு எதிரிடையாக இருந்தது. நன்கறியப்பட்ட கத்தோலிக்க எழுத்தாளர் ஃப்ரான்சிஸ் பார்க்கின்சன் கேயஸ் என்பவர்

தான் ஏன் தன் முகத்தையோ, தலைமுடியையோ ஒருபோதும் செயற்கையான சிங்காரிப்பினால் "அழகுப்படுத்திக்" கொள்ளவில்லை என விவரித்தார்: "ஒரு கால் நூற்றாண்டு வாழ்க்கை, ஒரு பெண்ணின் முகத்தில் ஒரு சில சுருக்கங்கள் மற்றும் சில தேவையற்ற முகலாயக்கட்டையின் மடிப்புகள் தவிர ஒரு பெரும் முகப்பாவனையை கொடுத்திருக்க வேண்டும். இந்த நீண்ட கால கட்டத்தில், அவள் வலியும் மகிழ்ச்சியும், சந்தோஷமும் துயரமும், வாழ்க்கையும் மரணமும் அகியவற்றுடன் மிக நெருக்கமாக அறிமுகமாயிருக்கிறார். அவள் கஷ்டப்பட்டு பிறகு மீண்டிருக்கிறாள், தோல்வியுற்று பிறகு வெற்றிப்பெற்றிருக்கிறாள். அவள் விசுவாசத்தை இழந்து மறுபடியும் திரும்ப பெற்றிருக்கிறாள். அதன் விளைவால், அவள் தன்னுடைய இளவயது பிராயத்தைவிட இப்பொழுது ஞானமுள்ளவளாக, கனிவுள்ளவளாக, அதிக பொறுமை உள்ளவளாக, சகிப்புத்தன்மை மிகுந்தவளாக இருக்க வேண்டும். அவளுடைய நகச்சுவை உணர்வு பெருகியிருக்கும், அவளுடைய கண்ணோட்டம் அகலமாயிருக்க வேண்டும். அவளுடைய இரக்கங்கள் ஆழமாகியிருக்க வேண்டும். அவள் வயதின் தாக்கத்தை அழிக்க முற்பட்டால், அதே வேளையில் அனுபவம் மற்றும் குணநலம் அகியவற்றின் தாக்கத்தை அழிக்கும் அபாயத்தில் அவள் இருக்கிறாள்." (Words of Inspiration, pg .198)

இந்த அறிக்கையில் எவ்வளவு பெரிய சத்தியம் அடங்கியிருக்கிறது! கிறிஸ்தவ பெண்மணிகள் தங்கள்

முகபாவனை மூலமாகவே சாட்சி பகிருகின்றனர். நீதி, பெருந்தன்மை, தூய்மை மற்றும் தேவனிடம் அமைதியான விசுவாசம் - இந்த குணலட்சணங்கள் யாவும் முகத்தோற்றத்தின் மூலமாகவே அடிக்கடி மிகத்தெளிவாக வெளிப்படுத்துகின்றன. ஒருவேளை இயேசு இதைத்தான் அர்த்தங்கொள்ளும்படி அவர் இப்படி சொன்னார், "மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" (மத்தேயு 5:16). ஒரு டஜன் பிரசகங்களை அல்லது வேதாகம படிப்புகளை காட்டிலும் இயேசுகிறிஸ்துவின் மதத்திற்கு அதிக கவனம் செலுத்துவதற்கு ஆவிக்குரிய ஒளியும் அலங்கரிக்கப்படாத முகமும் கவர்ந்தீர்க்கக்கூடும்.

கர்த்தருக்குப் பிரியமானது எது என்பதை தேடிப்பிடிக்க எப்படி அன்பு வேதாகமத்துக்கு வழிகாட்டுகிறது என்பதை விளக்கிக் காட்டி செயற்கையான அலங்காரம் பற்றிய பொருள்பற்றி நாம் கணிசமான நேரத்தை செலவு செய்திருக்கிறோம். கிறிஸ்தவ கொள்கைகளின் வேறு உதாரணங்களை நாம் உபயோகித்திருக்கக் கூடும். தூண்டுதல் மூட்டும் நடனம், திரைப்படங்கள், சூதாட்டம், உணவு பழக்கமுறை மற்றும் வஸ்திரம் போன்றவைகளுக்கும், அவரை எப்பொழுதும் பிரியப்படுத்த இதே கோட்பாடுகள்தாம் செயல் நோக்கமாயிருக்கின்றன. இவையெல்லாம் நிர்வாகக்குழு அங்கத்தினர்களால்

நிர்ணயிக்கப்படுவதில்லை, மாறாக இந்த சபையின் உயர்ந்த கோட்பாடுகள் தேவனுடைய வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்ட அவருடைய சித்தத்தின் அடிப்படையில் இருக்கிறது என்பது மிகத்தெளிவாக தெரிகிறது. தேவனைப் பிரியப்படுத்தும் செயல்களில் நாம் ஈடுபடும் மாபெரும் சந்தோஷத்தையும் மகிழ்ச்சியையும் பெற தேவன் தாமே நமக்கு உதவி செய்வாராக.

*******

AMAZING FACTS
India

# அமேசிங் ஃபேக்ட்ஸ் வேதாகமப் பாடங்கள் மூலம் உங்கள் தேடுதலைத் தொடருங்கள்!

மனதைக் கவரும், ஊக்கமூட்டும்
இந்தத் தொடர் சத்தியங்கள் உங்கள்
எதிர்காலத்தை தைரியத்துடனும்
நம்பிக்கையுடனும் எதிர்கொள்ள உதவும்.

எங்களை தொடர்பு கொள்ள

**BibleStudy.AFTV.in**

என்ற இணையதளத்தில் இன்றே
எங்களை சந்திக்கவும்.

இன்னும் அதிகமான **இலவச**
டிஜிட்டல் பத்திரிக்கைகளைத்
தேடிக் கண்டுபிடியுங்கள்.




AFTV.in/Free-Book-Library

ஆங்கிலம், ஹிந்தி, தெலுகு என
பல மொழிகளில் கிடைக்கிறது!

AMAZING FACTS
India
Post Box No. 51 • Banjara Hills
Hyderabad, TS 500034
www.AmazingFactsIndia.org